பக்கங்கள்: பன்னிரண்டு

...gistered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 27 ஞாயிற்றுக்கிழமை (09-05-2004) தொலைபேசி - 2223378 ஒலி 142

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
♦ விரைவானது ♦ பாதுகாப்பானது ♦ நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு
☞ பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத் தேவையில்லை
☞ வங்கிக் கணக்கு அவசியமில்லை
☞ நீடிக்கப்பட்ட சேவை நேரம்
☞ 365 நாள் சேவை
☞ 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்
THIRUMURUGAN COM NET
T.P. 021 222 7310, 021 222 7555, 021 222 7560
Fax 021 222 7310
E-mail: thirumurugan@eudoramail.com
ஆடியபாதம் வீதி, (ப.நோ.கூ.ச.முன்பாக) திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

# சமாதான முயற்சியை குழப்ப ஹெல உறுமய சதித்திட்டம்

## அரசியல் அவதானிகள் குற்றஞ்சாட்டு

(நமது நிருபர்)

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லவுள்ள அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தையை குழப்பியடிக்கும் நடவடிக்கைகளில் ஜாதிக ஹெல உறுமய திட்டமிட்டுச் செயற்பட்டுவருவதாக அரசியல் அவதானிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

ஜாதிக ஹெல உறுமயவின் திட்டமிட்ட சதிச் செயல்கள் சம்பந்தமாக கொழும்பு அரசியல் அவதானிகள் மேலும் தெரிவித்திருப்பதாவது;

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் மூலம் பேரினவாத சக்திகளின் வடிவமாக ஜாதிக ஹெல உறுமய உருவெடுத்துள்ளது.

இந்த சக்தியே அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பி மண்டு யுத்த சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டுவருகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி கூட்டு முன்னணியின் பலத்தைக் குறைக்கும் நோக்குடன் பெரும்பான்மையினத்தின் முக்கிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரனா-மின் கேபிள் மீது சாய்ந்ததனால்

## யாழ்ப்பாண இளைஞர் வவுனியாவில் உடல்கருகிப் பலி

(வவுனியா)

அன்ரனா, மின்சாரக் கேபிள் மீது சாய்ந்ததினால் அதனைப் பொருத்திக் கொண்டிருந்த இளைஞன் உடல் கருகி அந்த இடத்திலேயே பலியானார்.

வவுனியாவில் நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த றொபின்சன் (வயது 21) என்ற இளைஞனே மிகவும் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

வவுனியா ரம்பைக் குளம் ராணிமில் வீதியில் இடம் பெற்ற இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

வவுனியாவில் கராஜ் ஒன்றில் வேலை செய்யும் பிரஸ்தாப இளைஞன் நேற்று நண்பகல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மாதஇறுதியில் அகாஷி இலங்கை வருகிறார்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆராய்வதற்காக யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி இம் மாதஇறுதியில் இலங்கைக்கு வரவுள்ளார்.

இலங்கையின் சமாதான செயற்பாட்டின் நிலைமைகளை அவதானித்து உதவிகளை வழங்குவது தொடர்பாக அகாஷி தீர்மானம் எடுப்பாரென தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை டோக்கியோவில் உதவ வழங்கும் மாநாட்டின் உதவி வழங்கும் நாடுகள் அடுத்த மாதம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் நடவடிக்கைகள் சமாதான முயற்சியை முறிக்கும்

### தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

(கிளிநொச்சி)

படையினரின் நடவடிக்கையினால் சமாதான முயற்சியும், போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமும் முறிந்து போகும் ஓர் அபாயகரமான கட்டத்தில் இருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை செய்துள்ளார்.

அண்மையில் மட்டக்களப்பில் புலி உறுப்பினர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே தமிழ்ச்செல்வன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மேற்படி கொலையாளிகள் இராணுவத்தின சகல ஒத்துழைப்புடனுமே இச் சம்பவத்தில் செயற்பட்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது. எனவே இவ்வாறான சம்பவங்களில் இராணுவம் ஈடுபடுமானால் போர் நிறுத்த ஒப்பந்தமும், சமாதான முயற்சியும முறியும் ஒரு அபாயகரமான நிலை ஏற்படும் என்பதோடு, பாரதூரமான விளைவுகளையும் இராணுவம் சந்திக்க வேண்டியேற்படும்.

மட்டக்களப்பிலிருந்து செங்கலடி நோக்கிச் சென்று கொண்டிருந்த மேற்படி இரு போராளிகளும் நணபகல் 12 மணியளவில் தென்னா முனையில வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இருவரும் சுட்டுக் கொல்லப்பட்ட இடத்திற்கு இரு மருங்கிலும் 250

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முறையை மாற்றியமைக்க விரைவில் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும்

### அமைச்சர் தினேஷ் அறிவிப்பு

(நமது நிருபர்)

தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறையை மாற்றியமைக்கக்கூடிய சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்போவதாக நகர அபிவிருத்தி, நீர்வழங்கல் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

சியம் மகாநிக்காயாவில் அஸ்கிரிய பீட மகாநாயக்கர் உடுகம ஸ்ரீபுத்தரகித்த தேரரை நேற்றுக் காலை சந்தித்தபோதே தினேஷ் குணவர்த்தனா மேற்படி தகவலை அவரிடம் தெரிவித்தார்.


ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லவுள்ள இனப்பிரச்சினைத் தீர்விற்கான சமாதான முயற்சிகளையும், அபிவிருத்தித் திட்டங்களையும் வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்குரிய ஒத்துழைப்பையும் ஆசியையும் வேண்டியே இச்சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

இச்சந்திப்பையடுத்து அமைச்சர் திஷேகுணவர்த்தனா கருத்து வெளியிடுகையில் தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையை மாற்றுவதற்கு எதிர்க் கட்சியினரும் தமது பூரண ஆதரவை வழங்குவார்களென நம்புகிறேன் என்று கூறினார்.

(12ஆம் பக்கம் பாக்க)

## டெஸ்ற் போட்டிகளில்

## அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தி முரளிதரன் உலக சாதனை



(கராரே)

இலங்கை அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் டெஸ்ற் பந்து வீச்சில் அதிக டெஸ்ற் விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற சாதனையைத் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

இதன் மூலம் மேற்கிந்திய தீவுகள் அணியின் வேகப்பந்து வீச்சாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இணைந்து செயற்பட ஜெயலத் ஜெயவர்த்தன விருப்பம்



(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன இணைந்து செயற்படப் போவதாக தெரிவித்துள்ள ஜெயலத் ஜெயவர்த்தன புலிகளுடன் தமது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வரவேண்டும் எனவும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிக்குகளின் தலைக்கு ஒரு கோடி ரூபா விலை

(கொழும்பு)

பாராளுமன்ற சபாநாயகர் தெரிவின் பொழுது அரசாங்கம் தமக்கு ஆதரவு அளிக்குமாறு கோரி ஒருகோடி ரூபா லஞ்சம் வழங்குவதற்கு முன்வந்ததாகவும் அதைத் தாங்கள் முற்றாக நிராகரித்துவிட்டோம் எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் சிறி சுமலக்கல தேரர் தெரிவித்துள்ளார். வெசாக் தினத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றும் பொழுதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சபாநாயகர் தெரிவின் பொழுது இரு பௌத்த பிக்குமார்களும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கினால் ஒரு கோடி ரூபா தருவதாக எம்மிடம் கூறினார்கள். அவர்களின் ஒருகோடி ரூபாவினைவிட பொது மக்கள் எமக்கு வழங்கும் ஒருரூபா மிகப் பெரிதென நாங்கள் மதிக்கின்றோம் என்று அவர் மேலும் கூறினார். (உ)

## புலிகளுடன் பேச்சு நடத்த ஜே.வி.பி. இணங்கியுள்ளது

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பு, சுதந்திரம், பிரதேச ஒருமைப்பாடு ஆகியவற்றை இரண்டாம் நிலைக்குத் தள்ளாமல் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை நடத்தப் போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி உறுதியளித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு விடுத்த செய்திக் குறிபபொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுளதாவது,

நாட்டில் வாழும் சகல சமூகங்களினதும் அபிலாசைகளும் ஜனநாயகமும் பேணிப்பாதுகாகக்கப்படும். அத்துடன் சகல பிரஜைகளினதும் மனித உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம் கவனத்தில் எடுக்கப்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஐக்கிய தேசியமுன்னணியுடன் நடத்திய சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது ஏற்பட்ட குறைபாடுகளும் கவனத்தில் எடுக்கப்படும். ஐக்கிய இலங்கைக்குள் சகல சமூகங்களும் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும் வாழக்கூடிய சூழ்நிலை ஒன்றை உருவாக்க ஐக்கிய மக்கள்

(12ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இராணுவ இரகசியங்கள் கசிந்தமை தொடர்பில்

# அரசு மற்றும் புலிகளிடம் மன்னிப்புக்கோரி

# போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கடிதம்

(கொழும்பு)

இரகசியப் பேச்சுவார்த்தைகளின் விபரங்கள் தமது இணையத்தளம் ஊடாக வெளியிடப்படுவதுடன், கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்றும் அந்தச் செய்திகளை வெளியிட்டமை குறித்தும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அரசாங்கத்திடமும், விடுதலைப் புலிகளிடமும் மன்னிப்புக் கோரியுள்ளது.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ட்ரொன்ற் புறூவ் ஹொவ்டேயிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த 30ஆம் திகதி வன்னியில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது ஆராயப்பட்ட இராணுவ இரகசியங்கள் தொடர்பான விபரங்கள் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஆங்கிலப் பத்திரிகையொன்றில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதையடுத்தே, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, அரசாங்கத்திடமும், விடுதலைப் புலிகளிடமும் மன்னிப்புக்கோரி கடந்த வியாழனன்று இரு தரப்பினருக்கும் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்ட இராணுவ இரகசியங்கள் அடங்கிய விபரங்கள் ஆங்கிலப் பத்திரிகையொன்றில் வெளியானமை மிகப்பெரும் தவறாகும். இந்தத் தவறு நடந்திருக்கக் கூடாது. ஆனால், நடந்துவிட்டது. எனினும், இதுபோன்ற தவறுகள் எதிர்காலத்திலும் நடைபெறக் கூடாது. இரகசியங்களைப் பாதுகாப்பது எமது கடமை என கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒருவர் இதுபற்றித் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் இணையத்தளம் ஊடாகவே இந்தச் செய்தி கசிந்திருப்பதாக நம்பப்படுகிறது. அதன் இணையத் தளத்தின் குறியீடு எவ்வாறு வெளியானது என்பது குறித்து உள்ளக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிராந்திய அலுவலகங்களை மிகவும் அவதானமாகச் செயற்படுமாறு அதன் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

(உ-18)

## நன்கொடை பெறுமாறு அழைப்பு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் கீழுள்ள சனசமூக நிலையங்களை கடந்த வருடத்திற்குரிய நன்கொடையினை பெற்றுக்கொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் கடந்த வருடத்திற்குரிய நன்கொடை பணக் காசோலையினை ஊர்காவற்றுறை பிரதேச சபையில் பெற்றுக் கொள்ளுமாறு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.மகேந்திரன் அறிவித்துள்ளார்.

சனசமூக நிலையங்களுக்கு நன்கொடைப் பணமாக ஆயிரத்து 500ரூபா வழங்கப்பட்டு வருகிறது.

(உ-75)

# மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு உதவு பொருள் வழங்கியதில் பாரபட்சம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கு அதி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் அண்மையில் மீளக் குடியமர்த்தப்பட்ட 68 குடும்பங்கள் எந்தவொரு அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் அல்லற்பட்டு வருகின்றன.

தென்மராட்சியின் மறவன்புலோ மேற்கில் 26 குடும்பங்களும் கைதடி மற்றும் நாவற்குழிப் பிரதேசங்களில் 30 குடும்பங்களும் கோகிலாக்கண்டியில் 12 குடும்பங்களும் கடந்த மாதம் படையினரின் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தினுள் இருந்த தமது சொந்த வீடுகளில் மீளக் குடியமர்ந்தன.

இவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட போது அடிப்படை வசதிகள் எவையும் ஏற்படுத்தப்படவில்லை.

அத்துடன், அரசோ, அன்றி அரச சார்பற்ற நிறுவனங்களோ உதவித் திட்டங்கள் எவற்றையும் முன்வைக்கவில்லை.

இந்த நிலையில், இப்பகுதிக்கு கிராம அலுவலர் கூட நியமிக்கப்படாமையால், தமது உதவித் திட்டங்களை யார் ஊடாக எப்படிப் பெறுவது என்று அறியாது கலங்கி நிற்கின்றனர்.

இது இவ்விதமிருக்க இவர்களில் 15 குடும்பங்களுக்கு மாத்திரம் அண்மையில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் உணவல்லாத உதவு பொருட்களை வழங்கியிருப்பதையிட்டு ஏனைய பாதிக்கபட்ட குடும்பங்கள் விசனமடைந்துள்ளன.

(உ-16)

# வங்கி நிதித்துறை சான்றிதழ் கற்கைக்கு விண்ணப்பிக்கலாம்

(கொழும்பு)

வங்கித்துறை, நிதித்துறை சார்ந்த கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை கிழக்குப் பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவ தொழில் முயற்சியாண்மைப் பிரிவு கோரியுள்ளது.

வங்கி நிதித்துறை சான்றிதழ், வங்கி நிதித்துறை உயர் சான்றிதழ் ஆகிய பாடநெறிகளில் இணைந்து கொள்ளத் தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்போர் கல்விப் பொது சாதாரணதரத்தில் கணிதம், வர்த்தகம், கணக்கியல், மொழி ஆகிய பாடங்கள் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தியும், கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 2 பாடங்களில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை தொழில் முயற்சியாண்மைப் பிரிவில் பெற்று இம்மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் தமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வங்கித்துறை நிதித்துறை சார்ந்த நிறுவனங்களில் தொழில் புரிவோருக்கும் தொழில் பெற விரும்புவோருக்கும் உதவும் வகையிலேயே இந்த கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொழில் முயற்சியாண்மைப் பிரிவு இணைப்பாளர் கே.தம்பையா தெரிவித்துள்ளார்.

(உ-61,10).

# 4 மாதங்களாக நிவாரணமில்லை இடம்பெயர்ந்த மக்கள் இடர்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறி அகதி முகாம்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு கடந்த 4 மாதங்களாக இலவச நிவாரண உலர் உணவு வழங்கப்படாமையால் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஒரு வார காலமாக தொடர்ச்சியாக பெய்து வரும் மழையினால் முகாம்களில் தங்கியுள்ள மக்களின் குடியிருப்புகள் வெள்ளத்தினால் பாதிப்படைந்திருப்பதுடன், உலர் உணவு வழங்குவதில் ஏற்பட்டு வரும் கால தாமதத்தினால் ஒருவேளை உணவிற்கும் கஷ்டப்பட வேண்டியிருப்பதாக முகாம்களில் தங்கியுள்ள மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்த வருட மார்கழி மாதத்திற்கான இலவச உலர்உணவு கடந்த ஏப்ரல் மாதம் வழங்கப்பட்டதாகவும் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான உணவுப் பொருட்களை கூட்டுறவுச் சங்கங்கள் தமக்கு வழங்கவில்லை என்றும் விசனம் வெளியிட்டுள்ளனர்.

(வ)



மழை பெய்தாலும் நகர்ப்புறத்தில் குடிநீருக்கு குழாயடியில் கூட்டத்திற்கு குறைவில்லை.

படம்: க.பவன்

# முகாமைத்துவ சேவைத் திணைக்கள சுற்றுநிருபத்தை நீக்கத் தீர்மானம்

(கொழும்பு)

பல்வேறு சிக்கல்களைக் கொண்டுள்ளதான முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேற்படி சுற்றுநிருபம் அமுலில் இருப்பதனால் பல்கலைக் கழகங்கள் உட்பட உயர் கல்வி நிலையங்கள் ஆகியவற்றுக்கு விரிவுரையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள் ஆகியோரை நியமனம் செய்வதில் பல்வேறு தடைகளும், சிரமங்களும் ஏற்பட்டு வருவதாகக் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகள் ஆகியோருக்குப் பற்றாக்குறை நிலவியபோதும், முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மேற்படி சுற்றுநிருபத்திலுள்ள குறைபாடுகள் காரணமாக அவர்களை நியமிப்பதில் பெரும் தடைகள் இருந்தன என்று கல்வி அமைச்சு மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதனையடுத்து அண்மையில் இடம்பெற்ற கல்வியமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பல்கலைக்கழக உபவேந்தர்கள் ஆகியோருக்கிடையிலான பேச்சுவார்த்தையின் போதே இந்தச் சுற்றுநிருபத்தை நீக்குவதென்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பல்கலைக்கழக நிர்வாகசபைக் கூட்டங்களுக்கான காலக்கெடு கடந்த பெப்ரவரி மாதம் 12ஆம் திகதியெனக் குறிப்பிட்டு கடந்த ஆண்டு நிதியமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த சுற்றுநிருபமும் இனி வரும் காலங்களில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பொருந்தாது என நிதியமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் பல்கலைக்கழகங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் நிறுத்தப்படமாட்டாது என திறைசேரியின் செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு உறுதிமொழி வழங்கியுள்ளமையும்

## உளவியல் கருத்தரங்கு

(ஊர்காவற்றுறை)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் 30 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான உளவியல் கருத்தரங்கு விரைவில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரையும் யாழ்ப்பாணம் சாந்தியகத்தில் இக்கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்திலுள்ள 15பிரதேச செயலர் பிரிவுகளிலும் இருந்து தலா இருவர் வீதம் இக்கருத்தரங்கிற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இக்கருத்தரங்கில் உளவியல் பாதிப்பு, உளவியல் மேமபாடு என்பன தொடர்பாக துறைசாந்த அறிஞர்கள் விரிவுரையாற்றவுள்ளனர்.

(உ-75)

# முகத்தை மாற்றும் அம்மையாரும்

# ஒத்து ஊதும் கதிர்காமரும்

தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கும் தமிழீழ மக்களின் அன்றாட அத்தியாவசிய, அடிப்படைப் பிரச்சினைகளுக்குமுரிய தீர்வை சமாதான முறையில் பேச்சுவார்த்தைகளூடாக அடைய முடியுமா? - என்ற கேள்வியானது இன்று எம்மவர் நெஞ்சங்களில் எழுந்து நிற்பதை நாம் உணர முடிகின்றது. 'நல்லது நடக்க வேண்டும், அது நல்லபடியாகவே நடக்க வேண்டும் - என்பதுதான் எம்முடைய அவாவும் கூட!

ஆனால் யதார்த்த நிலை என்ன என்பதையும் நாம் தர்க்கித்தாக வேண்டிய கட்டாய நிலையில் இருக்கின்றோம்.

ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அமைத்த அண்மைக் காலத் தேர்தல் கூட்டணி கடந்த பொதுத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறத் தவறியதால் ஒரு நிலையான - திடமான அரசை நடாத்துமா என்ற சந்தேகம்தான் எழுந்துள்ளது. அது நியாயமான சந்தேகம்தான்! ஆனால் அறுதிப் பெரும்பான்மையை அமைக்கத் தவறிய அம்மையாரின் இந்தக் கூட்டணியின் ஒருமித்த கொள்கைப் பிரகடனமும் அந்தக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தனித்துவமான கொள்கைகளும், தமிழினத் தேசியப் பிரச்சினை குறித்தும் அவர்கள் அன்றாட பிரச்சினை குறித்தும், சாதகமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை என்ற உண்மையையும் நாம் உற்று நோக்க வேண்டும்! இதன் அடிப்படையிலும் நாம் இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தை உற்று நோக்க விழைகின்றோம்.

## தேர்தல் கூட்டணி

ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரின் இந்தத் தேர்தல் கூட்டணியானது முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான முயற்சிகளைக் கண்டனம் செய்துள்ளது மட்டுமல்லாது ரணில் விக்கிரமசிங்கவின் அரசானது, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஏராளமான விட்டுக் கொடுப்புகளையும் தந்துள்ளது என்றும் பிரசாரம் செய்து வந்துள்ளது. இந்தக் கூட்டணியானது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் சமர்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத்திட்ட வரைபிற்கு கடும் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளது. ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு, நோர்வேயானது அனுசரணையாளராகப் பங்கு பற்றக்கூடாது என்ற கொள்கையைக் கொண்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியானது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கு எதிராக எழுத்து மூலமாகவே தன் எதிர்ப்பை ஏற்கெனவே வெளியிட்டிருந்தது.

இன்று இந்தக் கூட்டணியானது, புத்த பிக்குகளின் அரசியல் கட்சியான 'ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவுக்கு வலை வீசி நிற்கின்றது. ஆனால் இந்தப் புத்த பிக்குகளோ, தமிழ் மக்களுடான சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குக் கூட தமது எதிர்ப்பைத் தெரிவித்துக் கடும்போக்கைக் காட்டி நிற்கின்றார்கள்.

தமிழீழத் தேசியப் பிரச்சினைக்கு நீதியான நியாயமான நிரந்தரமான கௌரவமான தீர்வு, சமாதான வழியில் வருவதற்குச் சில காலம் எடுக்கலாம் என்ற யதார்த்தத்தை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக அரச பயங்கரவாதப் போருக்கு முகங் கொடுத்து தமது அடிப்படை வசதிகளையும், அத்தியாவசியத் தேவைகளையும் இழந்து, தினமும் இன்னலுற்று வாழ்கின்ற தமிழீழ மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்பவேண்டும். அதுவிரைவாக -உடனடியாக நிறைவேற்றபட வேண்டும் என்று நாமும் வலியுறுத்துகின்றோம். இதில் இரண்டு கருத்துகளுக்கு இடமிருக்க முடியாது!

இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இன்னல் நிறைந்த



வாழ்க்கையை அனுபவித்து வருகின்ற எமது மக்களின் இயல்பு நிலை திரும்ப வேண்டுமானால், அவர்களுடைய சமூக பொருளாதார வாழ்வியலில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை உடனடியாகக் காணவேண்டும். வடக்கு கிழக்குப் பகுதிகளில் மீளக் குடியமர்வு - புனர்வாழ்வு - புனரமைப்பு, அபிவிருத்தி போன்ற பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும்! அதுமட்டு மல்லாமல், இந்தப் பணிகள் செயல்திறனுடன் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். இந்த வேளையில் ஒரு விடயத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்! அது முக்கியமான விடயமாகும். இந்த அவசிய - அத்தியாவசிய - அதிமுக்கியமான பணிகளானவை, தமிழ் மக்களின் அடிப்படை உரிமையுமாகும். ஆகவே இந்த அதிமுக்கியமான பணியை - அடிப்படை உரிமையான பணியை, உடனடியாக செயல்திறனுடன் திறம்பட நிறைவேற்ற வேண்டும்.

அதற்காகத்தான், தமிழீழ விடுதலைப் புலிகள் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்ட வரைபைச்சமர்பித்திருந்தார்கள்.

ஆனால் அன்றைய தினம் சந்திரிகா அம்மையார் நடந்து கொண்ட விதம் அவருடைய உண்மைச் சொரூபத்தை வெளிக்காட்டுவதாகவே அமைந்திருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத் திட்ட வரபை அன்றைய் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசிற்குக் கையளித்த சில தினங்களிலேயே, ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரத்தின் கீழ் செயல்பட்ட மூன்று முக்கியமான அமைச்சுகளைத் தன் கையகப்படுத்தியது மட்டுமல்லாது பின்னர் அதாவது இந்த ஆண்டு ஆரம்பத்தில் பராளுமன்றத்தையும் கலைத்து விட்டார்.

## நியாயப்படுத்துகை

ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் அன்றைய தினம் பல காரணங்களைக் காட்டி தன் செயலை நியாயப்படுத்த முனைந்திருந்தார். ஆனாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்ட வரையின் காரணமாகத்தான் அம்மையார் இந்த அடாவடித்தனமான செயற்பாடுகளை மேற்கொண்டார் - என்று நாம் முன்னரே தர்க்கித்து எழுதியுள்ளோம். அதனை அடிக்கோடிட்டு வலியுறுத்துவதற்காக தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் கடந்த ஆண்டு மாவீரர் தினப் பேருரையின் போது கூறியதை நாம் மீண்டும் குறிப்பிட விரும்புகின்றோம்.

தமிழீழத் தேசியத் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

எமது அதிகார சபைத்திட்ட வரைபின் உடனடியாக எதிர்வினையாகவே சந்திரிகா அம்மையார் இந்தப் பாரதுாரமான நடவடிக்கையை எடுத்தார் என்பது இன்று உலகறிந்த உண்மையாகி விட்டது.

என்று தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

தமிழீழ மக்களுக்குரிய தேசியப் பிரச்சினை என்பது முக்கியமான விடயமாகும். அது முறையான விதத்தில் நீதியான வகையில் தீர்க்கப்பட வேண்டும் என்பது ஒரு புறம் இருக்கட்டும். ஆனால் தமிழ் மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்ப வேண்டிய அவசியத்தை மட்டுமல்ல, அவர்களுடைய அடிப்படை வாழ்வியல் உரிமையைக் கூட ஏற்றுக்கொள்ள மறுக்கின்ற சிங்களத் தலைமைகளையும் நாம் இங்கே நிதர்சனமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது என்பதை வருத்தத்துடன் சுட்டிக் காட்டுகின்றோம்.

இன்றைய சிறிலங்கா அரசில் அங்கம் வகிக்கின்ற முக்கிய சிங்களக் கட்சிகளின், தமிழ் விரோதக் கொள்கைகள் குறித்தும், அந்தக் கட்சிகளின் கூட்டணியின் ஒட்டுமொத்த தமிழ் விரோத போக்கு குறித்தும் நாம் சில விடயங்களைக் காட்டித் தர்க்கித்து இருந்தோம். அத்தோடு சிறிலங்காவின் தற்போதைய ஜனாதிபதியான சந்திரிகா அம்மையாரின் தமிழ் விரோத நடவடிக்கைகள் குறித்தும் நாம் சுட்டிக் காட்டி இருந்தோம். இக்காலக்கட்டத்தில்தான் எதிர்காலப் பேச்சுவார்த்தைகளின் அடிப்படை விடயங்கள் குறித்தும் பல அரசியல் ஆருடங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

## அரசியல் ஆருடங்கள்

அரசியல் ஆருடங்களை நம்பி, ஒரு தேசிய இனத்தின் அத்திபாரம் போடப்பட்டதாகச் சரித்திரம் இல்லை. இன்றைய தினம், தமிழீழ மக்கள் மிகத் தெளிவான' ஆணையை சிங்கள தேசத்திற்கு மட்டுமல்ல, உலக நாடுகளுக்கும் தெரிவித்திருக்கின்றார்கள். மக்கள் கொடுத்துள்ள ஆணையில் உள்ள சில பகுதிகளை நாம் இங்கே தர விழைகின்றோம்.

தமிழ் மக்களின் உண்மை யான ஏகபிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே ஆவார்கள்

தமிழீழத் தேசிய இனத்தின் தாயகம் தேசியம் தன்னாட்சி - சுயநிர்ணய உரிமை - ஆகிய மூலதாரக் கொள்கைகளை ஏற்று அதன் அடிப்படையில் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.


தமிழ்த் தேசிய இனத்தின் - உண்மையான ஏகப் பிரதிநிதிக ளான தமிழீழ விடுதலைப்புலிகள் மீது சில நாடுகள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருகின்ற தடையை நீக்கி அவர்கள் கௌரவமாகவும், சமநிலையிலும் அதிகார பூர்வமாகவும் சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான சூழலை சர்வதேச சமூகம் உரு வாக்க வேண்டும்.

இருபது ஆண்டு காலமாக நீடித்த போரினால் அழிந்து போன தமிழ்த்தேசத்தையும், சிதைந்து போன தமிழர் வாழ்வையும் மீளக்கட்டியெழுப்பி, தமிழ்மக்கள் நாள்தோறும் எதிர்கொள்ளும் பூதாகரமான வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத்தீர்வு கண்டு தமிழ் மக்களின் வாழ்வில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்காக, மக்கள் நலனை மையப்படுத்தி, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து சட்ட ஆட்சிக்கு அமைவாக நடைமுறைச் சாத்திய மான முறையில் தமிழ் மக்கள் சார்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் முன் வைத்த 'இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபைக்கான ஆலோசனையைச் சிங்கள தேசம் முழுமையாக ஏற்று, தமிழீழ விடுதலைப் புலிகளோடு விரைவாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை நிறுவ வேண்டும்.

தமிழீழ மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் ஏகமனதாக வழங்கிய இறையாணையின் முக்கிய பகுதிகளில் சிலவற்றை மேலே தந்தோம். அவற்றில் ஒன்றாக இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வலியுறுத்தப்பட்டுள்ளது.

## சொல்லொணாக் கஷ்டம்

இருபது ஆண்டுகாலத்திற்கும் மேலாக சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வருகின்ற



எமது மக்களின் வாழ்வு இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு அவர்களுடைய சமூக - பொருளாதார வாழ்வியல் முன்னேற்றத்தைக் காண வேண்டும் - என்றும் மீள்குடியமர்வு புனர்வாழ்வு - புனரமைப்பு அபிவிருத்தி போன்ற பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப் பட வேண்டும் - என்றும் நாம் இக் கட்டுரையில் ஆரம்பத்திலேயே தர்க்கித்து இருந்தோம். அத்தோடு, இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்ட வரைவுக்கு ஸ்ரீலங்காவின் தற்போதைய ஆளும் கட்சிக் கூட்டணி கடுமையான எதிர்ப்பைத் தெரிவிததுள்ளது என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தோம்.

இதன் பின்னணியில் கடந்த பொதுத் தேர்தலின் பெறுபேறுகளை உற்று நோக்கினால் ஒரு முக்கிய விடயம் தெளிவாகப் புலனாகின்றது. தமிழீழ மக்களின் ஒட்டு மொத்தமான ஆணைக்கு எதிராக பெரும்பான்மைச் சிங்கள தேசம் வாக்களித்திருக்கின்றது. இதன் மூலம் அடிப்படை அரசியல் நீதியான பார்வையிலேயே இலங்கைத் தீவில் இரண்டு தேசங்கள் இருப்பதைக் காண முடிகின்றது. தமிழ்த் தேசியத்தின் அடிப்படை வாழ்வியல் பிரச்சினையைக் கூட தீர்க்க விரும்பாத போக்கினையே சிங்கள தேசியம் கொண்டிருக்கின்றது என்பதும் தெளிவாகப் புலனாகின்றது.

இப்படிப்பட்ட நிலையில்தான் தற்போதைய சிங்கள அரசு தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லி வருகின்றது. உண்மையில் ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாடு என்ன என்பதை உத்தியோக பூர்வமாக அறிந்து கொள்ள வேண்டிய வேளை இப்போது வந்து விட்டது. அதற்காக அரசியல் அழுத்தங்களைக் கொடுக்க வேண்டிய தேவையும் அவசியமாகி விட்டது.

சந்திரிகா அம்மையாரின் அரசாங்கம், மனப்பூர்வமாகவே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க விரும்புகின்றதா?

சில விடயங்களைச் சற்றுச் சுருக்கமாகவே உற்று நோக்குவோம். ஜனாதிபதி பதவியைப் பொறுத்த வரையில், சந்திரிகா அம்மையாரின் பதவிக்காலம், இந்தத் தவணையோடு முடிந்து போய் விடுகின்றது. மீண்டும் ஒருமுறை அவர் இப்போது அமைததிருக்கும் அரசோ, அறுதிப் பெரும்பானமை இல்லாமல் பலவீனமான அரசாக உள்ளது. ஜனாதிபதியின் விருப்பத்திற்கு மாறாக மகிந்த ராஜபக்ஷ பிரதம மந்திரியாக வந்துள்ளார். ஏற்கெனவே உள்ளூர் முறுகல் நிலை தொடங்கிவிட்டது. தவிரவும் இந்தப் பிரதம மந்திரியைப் பதவி நீக்கம் செய்வேன் - என்று முன்பு போல் அம்மையார் பயம் காட்ட முடியாது. காரணம் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியின் கட்சிக்காரர் ஆவார். பற்றாக்குறைக்கு எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர் சபாநாயகராக ஆகிவிட்டார்.

இக்காலக்கட்டத்தில் மகிந்த ராஜபக்ச தன்னுடைய பதவியை நிரந்தரமாகத் தக்க வைக்கும் வேலையிலும் இறங்கி விட்டார். ஜே.வி.பி. உடனும் பிரச்சினை - ஜாதிக ஹெல உறுமய வுடனும் பிரச்சினை என்று அம்மை யாரின் அரசு திண்டாடுகின்றது. இது உள்ளூர் நிலைவரம்.

## அரசியல் அழுத்தம்

உலக நாடுகள் பேச்சுவார்த்தைக்குப் போகுமாறு அம்மையாருக்கு அரசியல் அழுத்தங்களைக் கொடுக்க ஆரம்பித்து விட்டன. நிதி உதவி வழங்கும் நாடுகளின் கெடு பிடிகளோ தாங்க முடியவில்லை. அதனால் அம்மையார் மீண்டும் அரிதாரம் போடத் தொடங்கிவிட்டார். கதிர்காமரும் கனிவாகப் பேசத் தொடங்கியுள்ளார்.இப்படிப்பட்ட அரசியல் நாடகங்கள், இன்னும் எத்தனை ஆண்டுகள் நடைபெற்று தமிழீழ மக்களின் அடிப்படை வாழ்வியல் பிரச்சினையும் தேசியப் பிரச்சினையும் தீர்க்கப்படாமல் இழுபறிப்படுமோ என்ற ஐயப்பாடு பெரிதாக உள்ளது.

ஆனால் - தமிழீழ மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தற்போதைய சிறிலங்கா அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து தங்களதுநிலைப்பாட்டைஉத்தியோக பூர்வமாக அறிவித்து, பேச்சுவார்த்தைகளின் முதல் கட்டமாக இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபையை உடனடியாக நிறுவுவதற்கு முன்வர வேண்டும். மனப்பூர்வமாக இதய சுத்தியுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க சிறிலங்கா அரசு முன்வர வேண்டும்.இல்லா விட்டால் தமிழீழ மக்கள் தாங்கள் அளித்த இறையாண்மையின் மிக முக்கிய பகுதி குறித்து செயற்பட வேண்டி வரும். அந்த முக்கியமான இறையாணை இது வாகும்.தமிழ்த் தேசிய இனத்தின் கோரிக்கைகள் தொடர்ந்தும் நிராகரிககப்பட்டு, நியாய பூர்வமான அரசியல் தீர்வு மறுக்கப்பட்டு இராணுவ ஆக்கிரமிப்பும், அரசு அடக்கு முறையும் மீண்டும் தொடருமானால் தமிழ்த்த தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில் தமிழரின் இறைமையும் சுதந்திரமும் நிலை நிறுத்தப்படுவது தவிர்க்கப்பட முடியாத யதார்த்த மாகி விடும்.

*அவுஸ்திரேலியாவிலிருந்து சபேசன்.*

# ஆனந்தபுரக் கிராமம் புத்துயிர் பெறுமா...?

**ஊர் தரிசனம் ①**

2004ஆம் ஆண்டின் உடனடித்துரித வேலைத் திட்டத்திலாவது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களைக் கொண்ட இருபாலை தெற்கு "ஆனந்தபுரக் கிராமம்" புத்துயிர் பெறுமா?

வறிய மக்களை முன் னேற்றவென, அவர்களுக்கு புனர் வாழ்வு கொடுக்க பல கோடி மில்லியன் ரூபாய்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் திட்டங்கள் யாவும் ஆனந்தபுரம் போன்ற அடிமட்ட கிராமங்களில் வாய்ப்பேச்சில் மட்டுமே முடிந்துள்ளது.

வளமிக்க வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த இருபாலை தெற்கு (J/257) கிராம சேவையாளர் பிரிவிற்கு உட்பட்டதாய், யாழ்.நகரிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில பதினாறு சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட ஆனந்தபுரக் கிராமம் அநாதையாகக் கைவிடப்பட்டுள்ளது.

எவரும் உதவிக் கரம் நீட்ட முன்வராத நிலையில், 420 குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட 130 குடும்பங்களும் அத்தியாவசியத் தேவைகளைக் கூட எட்டமுடியாத வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றன.

இக்கிராமத்தின் வரலாற்றுப் பின்னணியை நோக்கின், இக்கிராமத்திற்கு முன்னர் வழங்கப்பட்ட பெயர் 'முனீஸ்வதி' என்பதாகும். பாலை மரங்களையும் ஏனைய பயன்தரு மரங்களையும் கொண்டு வனப்பு மிகு குறுங்காடாக இருந்த இவ்விடத்தில் 1800ஆம ஆண்டளவில் 15 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன.

1990ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் 80 குடும்பங்களுக்கு அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பரமானந்தராஜா என்பவர் காணிகளை வழங்கிக் கிராமத்தை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். இவரால் திறந்து வைக்கப்பட்ட கிராமத்திற்கு இவரது பெயரைக் குறித்து, 'ஆனந்தபுரம்' எனப் பெயரிடப் பட்டது. பயிர்ச் செய்கையின் நன்மை கருதி ஆனந்தபுரத்தில் மக்கள் குடியேறினார்கள்.

தற்போது, 130 குடும்ப அங்கத்தவர்களில், 184 ஆண்கள், 216 பெண்கள், 20 இளைஞர்கள், 18 யுவதிகள், 85 சிறுவர்கள், 75 விதவைகள், 10 அங்கவீனர்கள் இடம் பெற்றிருப்பது சென்ற வருட புள்ளிவிபர அறிக்கையில் இருந்து புலனாகிறது.

இங்குள்ள முழுக் குடும்பங்களும் நிவாரணத்தை நம்பியே தமது ஜீவனோபாயத்தை நடத்துகின்றனர். தலைவன், தலைவி இருவருமே கூலி வேலைக்குச் செல்லும் 66 குடும்பங்கள் உள்ளன. இவர்களின் அநேகர் கமம், மேசன், தச்சுவேலை, சீவல் தொழில், பெயின்ரிங் போன்ற பல தரப்பட்ட கூலி வேலைகளைச் செய்து வருகின்றனர்.

37 குடும்பங்களின் பாரத்தை பெண்களே சுமக்கின்ற பரிதாபமும் உண்டு. 15 குடும்பங்கள் மாதாந்த உதவிப் பணத்தைப் பெறுகின்றன.

கால்நடைகளை வளர்ப்பதற்கு ஏற்ற சூழல் சாதகமாக இருப்பினும் போதிய பணவசதியில்லாமையினால், விரல் விட்டு எண்ணக்கூடியளவிலேயே கால்நடை வளர்ப்பு இடம்பெற்று வருகின்றது.

"குறிப்பிடத்தக்களவு வயல நிலங்களை ஆனந்தபுரக் கிராமம் கொண்டிருந்த போதிலும், அவை அப்பிரதேச மக்களுக்குச் சொந்தமானவையல்ல. அயல் கிராமத்தவரே இவ் வயல் நிலங்களில் சொந்தக்காரர்கள் அவர்களின் வயலிலேயே இப்பகுதி மக்கள் கூலி வேலை செய்வதாக" இருபாலை 'மக்கள் நலன் காக்கும் பிரிவின்' தலைவர் வ.செலலத்துரை கூறினார்.

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான இருப்பிடங்களைப் பற்றி நோக்கின், இங்கு 98 வீதமான இருப்பிடங்கள் மண்வீடுகளாகவும், சிறிய ஓலைக் குடிசைகளாகவுமே அமைந்துள்ளன.

குறிப்பாக 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலையினால் 98 வீடுகள் முற்றாகவும், 8 வீடுகள் பகுதியாகவும் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்த மண் எங்களின் சொந்த மண் எனக் கூறமுடியாத அளவில் 18 குடும்பங்கள் உள்ளன.

அயலிலுள்ள சனசமூக நிலையங்களும், ஆலயங்களுமே மழை காலங்களில் அப்பகுதி மக்களுக்கு தஞ்சம் அளிக்கின்றன.

அதிகாலைவேளையிலே காலைக்கடனை கழிக்கவென இப்பகுதி மக்கள் பற்றைகளை நோக்கியே காலடி வைக்கும் 'வழமை' தொடர்கின்றது. 110 மலசலகூடங்கள் பாவனைக்குத் தேவையென கணக்கிடப் பட்டுள்ள போதும், இரண்டு மலசலகூடங்கள் மட்டுமே தற்போது பாவனையில் உள்ளன. இதனால் பெண்களே கூடுதலான அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். அத்துடன், இந்த மலசலகூடப் பற்றாக் குறையினால் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டு தொற்று நோய்கள் பரவக் கூடிய ஆபத்து நிலை காணப்படுகின்றது.

இதுபற்றி ஞானஒளி சன சமூக நிலையத்தின் பொருளாளரும், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவியுமான திருமதி ந.அருந்தவமலர் குறிப்பிடும்போது, 'மலசலகூடப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்து தரும்படி அமைச்சர்கள் மட்டத்தில் பலமுறை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினூடாக கோரிக்கை விடுத்திருந்தேன். இதுவரைக்கும் எவ்விதமான பலன்களும் கிடைக்கவில்லை எனக் கூறினார்.

இங்குள்ள 10 குடும்பங்களுக்கு மட்டுமே கிணற்று வசதிகள் உண்டு.ஏனைய 120 குடும்பங்களும் தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றன. அதுமட்டுமல்லாது உவர் நிலப்பகுதிகளாய் இருப்பதனால் முழுக்குடும்பங்களும் குடிநீர்ப் பற்றாக்குறையினை அன்று முதல் இன்று வரைக்கும் எதிர்கொள்ளுகின்றனர். மாதந்தோறும் குடும்பம் ஒன்று தலா 50 முதல் 75 ரூபா வரை செலுத்தினால் மட்டுமே 'நீர்வேலி பிரதேச சபையின் தண்ணீர் பவுசரிலிருந்து' குடிநீரைப் பெறமுடியும் எனும் அவலம் தொடர்கின்றது.

குழாய் மூலம் வேண்டிய குடிநீரை பெற்றுத்தரும்படி உரியவர்களிடம் ஆனந்தபுர மக்கள் பலமுறை கேட்டும் இன்னமும் எவ்வித முன் நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டங்கள் என்ற பெயரிலே தற்போது வடக்குக் கிழக்கில் பல்வேறு நடவடிக்கைகள் திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்ற போதிலும், அவை ஆனந்தபுரம் போன்ற அடிமட்டக் கிராமங்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டிருக்கின்றது என்பதே வெளிப்படை.

கல்வி வளர்ச்சிக்கு ஏற்ற சாதகமான சூழ்நிலை ஆனந்தபுர கிராமத்தில் சூனியமாகவே உள்ளது. 120 மாணவர்களைக் கொண்ட இப்பகுதியில் ஒரு சிறிய பாடசாலை கூட இல்லாமை மனவேதனைக்குரியதாகும். எனினும், முன்பள்ளி நிலையம் என்ற ரீதியில் ஞானஒளி முன்பள்ளி நிலையத்தினைக் குறிப்பிடலாம். 20 முன்பள்ளி மாணவர்களைக் கொண்ட இம் முன் பள்ளி நிலையம் தளபாட வசதிகள் இன்றி இயங்கி வருகின்றது. இந்த முன்பள்ளி மாணவர்களின் மாதாந்தப் பணத்தைக்கூட செலுத்த முடியாத வறுமை நிலையில் பெற்றோர்கள் உள்ளனர்.

இங்குள்ள மாணவர்கள் அனைவரும் கால்நடையாக நீண்டதூரம் சென்று அயல் கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர். இவர்களில் மூவர் உயர்தர மாணவர்களாவர். எனினும் 10 மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. 'அனைவருக்கும் கட்டாயக் கல்வி எனும் அரசாங்கக் கொள்கை' இங்கே சறுக்கி விடுகின்றது.

**தரிசனம்**
**தி.உமாசங்கர்**
**செய்தியாளர், இருபாலை.**

புதிய ஆண்டில் பாடசாலை ஆரம்பமான நாளில் மட்டும், 13 மாணவர்கள் பாடசாலைக்கு சமூமளிக்கவில்லை. காரணத்தைக் குறித்து ஒரு மாணவனின் பெற்றோரிடம் கேட்டபோது, 'நான் நேற்று ஞாயிற்றுக்கிழமை எண்டதால வேலைக்குப் போகல்ல. இவன் பென்சில் கொப்பிகள் எனக் கேட்டான். நான் என்ன செய்ய? என்னால் அவற்றை வேண்டிக் கொடுக்க முடியல்ல. அதனால அவன் பள்ளிக்கு போகாமல் நிண்டுட்டான்' எனச் சோகம் ததும்பக் கூறினார்.

தமது பிள்ளைகள் பள்ளிக்கூடம் போவதைக் காட்டிலும் தந்தையுடனோ தமையனுடனோ கூலி வேலைக்கு போவதனையே பெற்றோர்கள் விரும்பும் அளவுக்கு அவர்களது தாழ்ந்த வருமானம் வழிசமைத்துள்ளது.

அரச வைத்திய நிலையங்களோ, மருந்தகங்களோ அயலில் இல்லாமையினால் பலர் தொற்று நோய்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். தனியார் மருந்தகங்களில் மருத்துவம் பெறக்கூடிய வருமானம் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. சுகாதாரச் சீர்கேட்டினாலும், மருத்துவ வசதியின்மையாலும் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சுகாதார வைத்திய வசதிகளின்மையால் கர்ப்பிணிப் பெண்களும் சிறுவர்களுமே கூடுதலாகப் பாதிக்கபபட்டுள்ளனர்.

இந்த ஆனந்தபுரக் கிராமத்தில் தார் வீதிகள் இருந்ததற்கான தடயம் எதுவுமே அங்குள்ள வீதிகளில் இல்லை. குன்றும் குழியுமாக நெளிந்து வளைந்து செல்லும் அவ்வீதிகள் மழைக் காலங்களில் பாரிய நதிப்பெருக்குப்போல் மாறிவிடுகின்றன. அதுமட்டுமல்லாமல, மின்சாரத் தொலைத் தொடர்பு இணைப்புக்களும் அங்கு இல்லை. இதனால் மேலும் இக்கிராமம் பின்னடைவையே நோக்கிச் செல்கின்றது.

ஆனந்தபுரம் உள்ளிட்ட இருபாலை தெற்கு மக்களின் வாழ்க்கையினை மேம்படுத்தும் நோக்கில் "38 இலட்சம் ரூபாவினை 'நியாப்' ஒதுக்கியிருந்தது. அதில் ஆனந்தபுரத்தில் உள்ள 3 கிலோமீற்றர் பாதை புனரமைப்பு, சுழற்சி முறைக்கடன் வசதி வழங்கல், செம்மணிக்குளம் புனரமைப்பு என்பன உள்ளடக்கியிருந்தன. அவற்றுள் செம்மணிக்குளம் மட்டுமே 28 இலட்சம் ரூபாவில் பூர்த்தியாக்கப்பட்டிருக்கின்றது" என்றார் இருபாலை தெற்குக் கிராம சேவையாளர் கே.நாகேந்திரம்.

ஆனந்தபுரக் கிராமத்தில் இரண்டு சனசமூக நிலையங்கள், இரண்டு சிறிய இந்துக் கோயில்கள், கிறிஸ்தவ வழிபாட்டு இடம், விளையாட்டு மைதானம், விளையாட்டுக் கழகம், சிறுவர் கழகம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் என்பன பெயரளவில் இயங்கி வருகின்றது. இவற்றினை உரிய முறையில் இயக்குவதற்கு அம்மக்களிடம் கல்வி அறிவும், பொருளாதார வளமும் இல்லாதிருக்கின்றன.

"கல்வியறிவின்மை ,அக்கறையின்மை, தாழ்வுச்சிக்கல், குரல் கொடுக்க முடியாமை, பொருளாதார நலிவுநிலை போன்ற காரணங்களினால் இக் கிராம மக்கள் எல்லைப்படுத்தப்பட்டுள்ளனர். அதுமட்டுமன்றி பிறரில் தங்கி வாழும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்" எனக் கூறினார் இருபாலை மக்கள் நலன்காக்கும பிரிவின் வெளிக்கள உத்தியோகத்தர் எஸ்.நித்தியரத்தினம்.

யாழ். மாவட்ட அரச செயலகத்தினால் 2004. ஆம் ஆண்டுக்கான துரித உடனடி வேலைத் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுக்கள் அரச திணைக்களங்களில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வறுமைக்கோட்டின் கீழ் வாழும மக்களைக் கொண்ட ஆனந்தபுரக் கிராமம் இத்திட்டத்தின கீழாவது புத்துயிர் பெறுமா? என அப்பகுதிப் பொது அமைப்புக்களும், பொது மக்களும் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றனர்.

**தொகுப்பு:**
**சசிரஜனி புலேந்திரன்**

---

## கந்தப்பொல சம்பவத்தில்
## தொழிலாளர் பலியானமை பற்றி ம.உ.ஆ.கு. விசாரிக்கும்

(கொழும்பு)

கந்தப்பொலவில் அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது இரு தொழிலாளர்கள் கொல்லப்பட்டமை குறித்து கண்டியிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளை நடாத்தவுள்ளது.

இதனை முன்னிட்டு எதிர் வரும் 12,13 ஆம் திகதிகளில் சாட்சியாளர்களிடமிருந்து ஆணைக்குழு வாக்குமூலங்களைப் பதிவு செய்யவுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தகவல் தெரிந்தவர்களைக் கண்டி மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு மனித அபிவிருத்தி தாபனத் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

கந்தப்பொல சம்பவம் தொடர்பாக பாரபட்சமான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதாக பொது மக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-61,18)

---

## தீர்ப்பை மாற்றக்கோரி
## மரண தண்டனைக் கைதிகள் கூரை மீதேறி உண்ணாவிரதம்

(கொழும்பு)

வெலிக்கடைச் சிறைச்சாலை கூரை மீது ஏறி கைதிகள் நடத்திவரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் நேற்று மேலும் 11 பேர் இணைந்து கொண்டதாக வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரி எம்.ஏ. சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் 10 பேர் ஈடுபட்டிருந்தனர். இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நேற்று மேலும் 11 பேர் இணைந்து கொண்டனர்.

நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்ப்ட்டு தற்போது கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களே உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்கைதிகள் 21 பேரும் தமக்கு வழங்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றவேண்டும் என்ற கோரிகையை முன் வைத்தே போராட்டத்திலீடுபட்டு வருகின்றார்கள்.

(உ-60.10)

# இன்று ஒரு தகவல்

## செயற்கைப் பூச்சிகள்

ஒரு சிறிய எறும்பு. அது பாட்டுக்குப் பேசாமல் ஒரு இடத்தில் உட்கார்ந்திருக்கின்றது. அது இருக்கும் இடத்தைத் தாண்டி யாராவது போனால் திடீரென்று ஓடி வந்து தாக்கி விரட்டுகிறது., இது எப்படிச் சாத்தியம்? விஷயம் என்னவென்றால் அது நிஜமான எறும்பு இல்லை. செயற்கை எறும்பு. அது ஒரு ரோபோட்.

அமெரிக்காவில் உள்ள மாசாசூஸெட்ஸ் இன்ஸ்டிடியூட் ஒ·.ப் டெக்னோலஜி அங்கேயுள்ள ஆய்வு கூடத்தில் தான் இதுபோன்ற செயற்கைப் பூச்சிகளை உருவாக்குகின்றனர். இவர்கள் உருவாக்கியுள்ள செயற்கை எறும்புக்கு யென்கிஸ் என்று பெயர்.

இந்த ரோபோட் எறும்பு கொஞ்சம் கூட செயற்கைத்தனம் இல்லாமல் இயற்கையாகச் சாதாரணமாகப் போய் வரும். நடக்கும். திரும்பும்.முன்னால் போவோர் வருவோரைத் தாக்குகிறது. ஒரு பெரிய கணனிக்குப் பதிலாக ஒரு சிறு மைக்ரோ புரொசசர் இந்தப் பணிகளைச் செய்வதனால் இதைப் பார்ப்பதற்கு ஒரு உயிருள்ள எறும்பு மாதிரியே இருக்கும். அது போலவே வேலை செய்யும்.

இதுபோல் எறும்பு மட்டுமல்ல எத்தனை விதமான பூச்சிகளை அங்கேயுள்ள விஞ்ஞானிகள் உருவாக்குகின்றனர் எதற்காக? வீட்டு வேலைகள் செய்வதற்காக, அறுவைச் சிகிச்சைகள் செய்வதற்காக, செவ்வாய்க் கிரகத்துக்குப் போவதற்காக! இங்கேயுள்ள விஞ்ஞானிகளின் முக்கிய நோக்கம் என்ன தெரியுமா? ஒரு செயற்கையான உயிரை இரும்பு உடல்களுக்குக் கொடுப்பது. அவற்றை இந்த உலகில் உலவ விட்டு அதன் மூலம் ஆக்கபூர்வமான பணிகளைச் செய்வது.

முதலில் அவர்கள் உருவாக்கியதற்குப் பெயர் ஆலன். அது ஒரு துடைப்பம். இது சாவி கொடுத்த பொம்மை போனறது. சுவற்றில் உள்ள ஓட்டைகளைச் சுத்தம் செய்யும். கதவின் அருகில் செல்லும். அதிலுள்ள தூசுகளைத் துடைக்கும். அவ்வளவுதான். அந்த ஆய்வு கூடத்தில் தயாரான இரண்டாவது ரோபோட் ஹெர்பெர்ட். இதற்கு என்ன வேலை தெரியுமா? அந்த ஆய்வுகூடத் தில். அங்கங்கேயுள்ள வெற்றுச் சோடா போத்தல்களை சேகரித்துக் கொண்டு வருவது.

இதுபோன்ற இயந்திரப் பூச்சிகளை அனுப்பிச் சந்திரனிலும், செவ்வாய்க்கிரகத்திலும் ஆய்வுகளை நடத்தலாம் என்று யோசிக்கின்றனர். அதற்காக இவர்கள் என்ன செய்கின்றனர் என்றால் இந்த இயந்திரப் பூச்சிகளின் ஒவ்வொரு பகுதியையும் மிகவும் நுணுக்கமாகத் தயாரிக்கின்றனர்.

இந்த எறும்புகளை நுண்ணிய உணர்திறன் கொண்டதாகவும், செய்திகளை நுணுக்கமாகச் சேகரிக்கும் வகையில் வடிவமைக்கின்றனர். ஜென்கிஸ் என்ற எறும்பு இந்த வகையில் தான் வடிவமைக்கப் பட்டுள்ளது. அட்டிலா என்ற சக்திவாய்ந்த ரோபோட்டும் விண்வெளி ஆய்வுக்காக வடிவமைக்கப்பட் டிருக்கின்றது. "ஒவ்வொரு கணனி சில்லும் எழுந் திருந்து நடக்க வேண்டும். அதுதான் எங்களின் கனவு. அந்தக் கனவு விரைவில் நனவாகும்" என்கிறார் அங்கேயுள்ள ஒரு விஞ்ஞானி.

நமது எறும்புகளைப் பற்றி ஒரு கதை உண்டு. அதாவது ஒரு பெரியயானை மிரண்டு போய் ஓடி வந்து கொண்டிருந்ததாம். வழியில் ஒரு சிறிய எறும்பு நின்று கொண்டிருந்தது. அது அந்த யானையைப் பார்த்து "ஏன் இப்படிப் பயந்து ஓடி வந்து கொண்டி ருக்கின்றாய்?" என்று கேட்டது.

அதற்கு அந்த யானை கூறியது "ஒரு பூனை என்னைத் துரத்திக் கொண்டு வருகின்றது. அதுதான் பயந்து ஓடிவந்து கொண்டிருக்கின்றேன்" என்றது. அதற்கு இந்த எறும்பு கூறியதாம் "அதற்கா இப்படிப் பயப்படுகிறாய். இனிப் பயப்படாதே. பேசாமல் என் பின்னே வந்து ஒளிந்துகொள்" என்றதாம்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# புலிகள் மீதான தடையை இந்தியா நீக்க வேண்டும்

## — ரவிராஜ் தெரிவிப்பு —

(திருநெல்வேலி)

இந்தியா தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

தனது ஆதரவாளர்கள் மத்தியில் மேலும் பேசிய ரவிராஜ், இலங்கையின் அயல்நாடான இந்தியாவுடன் தமிழ் மக்கள் நெருங்கிய உறவைக் கொண்டிருந்த போதும் தற்போது அம்மக்கள் இந்தியா மீதான தமது நம்பிக்கையை இழந்து வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழ் மக்கள் மீதான நம்பிக்கையை வலுப்படுத்தும் நோக்குடன் இந்தியா விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வடக்கு, கிழக்கு இடைக்கால நிர்வாக சபையை உடனடியாக வழங்க வேண்டுமென சிறிலங்கா அரசுக்கு இந்தியா வலியுறுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-43)

# ஊடகவியல் டிப்ளோமா பகுதி / முழுநேர கற்கை இம்மாத இறுதியில் ஆரம்பம்

## பேராசிரியர் அ.சண்முகதாஸ் தகவல்

(யாழ்ப்பாணம்)

ஊடகவியல் டிப்ளோமாக் கற்கை நெறிக்கான பாடத்திட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடப் பரிந்துரையுடன் பல்கலைக்கழக மூதவையின் ஒப்புதலுக்கு அனுப்பிவைக்கப்பட்டதற்கமைய, மூதவை இக்கற்கை நெறியினைப் பகுதிநேரக் கற்கையாகவும் முழுநேரக் கற்கையாகவும் தொடங்குவதற்கும் அதற்குரிய பாடநெறிக்கும் ஒப்புதல் வழங்கியது.

இக்கற்கை நெறி இம்மாத இறுதிப்பகுதியிலே தொடங்கப்படவுள்ளதுடன், இதழியல் கற்கை நெறியினைக் கற்பிப்பதற்குரிய விரிவுரையாளர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை. இவர்களை நியமிப்பதில எடுத்த முதற்சுற்று முயற்சி இன்னும் முடிவடையவில்லை. இதறகான துணைவேந்தர் தலைமையிலான தெரிவுக குழு இன்னுஞ் சில நாட்களில் கூடவுள்ளது.

ஊடகவியல் வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இவ்வாறு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அச்செய்திக் குறிப்பில் மேலும்,

டென்மார்க் அரச உதவியுடன், யுனெஸ்கோ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் ஒன்றினை யாழ்ப்பாணத்திலே அமைப்பதென முடிவுசெய்யப்பட்டது. முன்னைநாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டார்.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளருக்குப் பயிற்சி கொடுப்பதும் அவர்கள் ஊடகவியற் செய்திகளையெல்லாம் உடனடியாக அறிவதற்கும் அறிவிப்பதற்கும் ஏற்ற நவீன தகவல் தொழில் நுட்பக் கருவிகளைக் கையாளுவதற்கு உரிய வாய்ப்புகளை வழங்குவதும் இம்மையத்தினுடைய நோக்காகும்.

சென்ற ஆண்டு ஆடி மாதம் தொடக்கம் இம் மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளருக்கு 8 பணியவைகள நடத்தப்பட்டுள்ளன. முதலாவது பணியவையிலே 60 ஊடகவியலாளர் பங்குபற்றியுள்ளனர். நடைபெற்ற 8 பணியவைகளிலும் 260 ஊடகவியலாளர் பங்குபற்றினர்.

இவ்வாறு பணியவைகள் நடத்துவது மட்டுமன்றி ஊடகவியலாளருக்கு ஊடகவியலில் ஏற்ற கல்வித் தராதரம் வழங்குவதற்காக இதழியலில் டிப்ளோமாக் கற்கை நெறியினையும் தொடங்க வேண்டுமென யுனெஸ்கோ தன்னுடைய அறிவுறுத்தல்களில் குறிப்பிட்டிருந்தது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ் இதனை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இதழியல் பயிற்சியாளர்களைப் பயிற்றுதற்கு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்திலே ஒரு பணியவையினைத் தங்களுடைய செலவிலேயே நடத்த பி.பி.சி. முன்வந்தது. இதற்கமைய 26.04.2004 தொடக்கம் 30.04.2004 வரை பி.பி.சியின் பயிற்சியாளரைப் பயிற்றுவிக்கும் கெவின் பேர்டன் பணியவையினை நடத்தினார். அவருடன் வந்த பொ.மாணிக்கவாசகம் உட்பட நான்கு ஊடகவியலாளர், உதயன், வலம்புரி, தினக்குரல் சார்பாக மூவர், இதழியல் விரிவுரையாளருக்காக நடைபெற்ற தேர்வுக்குத் தோற்றியவர்கள் மூவர்( ரகுராம், வண.பிதா ரூபன் மரியாம்பிள்ளை, சத்தியவேந்தன்) யாழ். பல்கலைக்கழகம் சார்பாக கலாநிதி கி.விசாகரூபன், கே.ரி.கணேசலிங்கம், இணைப்பாளர் இப்பணியவையிலே பங்குபற்றினர்.

இன்னும் பல பணியவைகளை இம்மையம் நடத்தவுள்ளது. பல்கலைக்கழகத்துடன் இம்மையம் இணை[illegible] செயறபடுவதால் பல்கலைக்கழகச் சட்ட திட்டங்களுக்கமையவே எம்முடைய பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இம்மையத்தின் வழங்களை ஊடகவியலாளர் ஏற்ற முறையிலே பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இணையத்தளம்,மின்னஞ்சல் வசதிகளைப் பயன்படுத்த வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளன என்றுள்ளது. (உ)

# இராசி பலன்

**09.05.2004**

**(சித்திரை 27, ஞாயிற்றுக்கிழமை)**
**பஞ்சமி பிற்பகல் 2.50 மணிவரை**
**பூராடம் மாலை 5.23 மணிவரை**
**இராகுகாலம் 4.24-5.54 மணிவரை**
**சுபநேரம் 8.54-10.24 மணிவரை**
***சித்தாமிர்தம்***

**மேடம்**
கடுமையான முயற்சி, இடமாற்றம், புதிய திட்டமிடல், உறவினர் சந்திப்பு.

**இடபம்**
வாகன பயம், அமைதிக்குறைவு, காரியத்தடங்கல், எதிர்பாராத பிரச்சினை.

**மிதுனம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, குடும்ப சுகம், தெய்வசிந்தை, அபூர்வ சந்திப்பு.

**கடகம்**
புதிய முயற்சி, தேகநலன், போசன சுகம், புத்தி சாதுரியம்.

**சிங்கம்**
வியாபார சிந்தை, குடும்பக்கவலை, எடுத்த காரியம் தாமதமாகும், தன விரயம்.

**கன்னி**
புதிய விடயம், தாய்வழிஉறவு, உடல் நலக்குறைவு, காரிய தாமதம்.

**துலாம்**
கூட்டு முயற்சி, பெரியோர் சந்திப்பு, போசன சுகம், சகோதரர் உதவி.

**விருச்சிகம்**
வீண் வார்த்தை, அபகீர்த்தி, முயற்சி தாமதம், தனவிரயம்.

**தனுசு**
நல்ல காரியம், தொழில்சிந்தை, விருந்து பசாரம், பிரயாணம்.

**மகரம்**
காரிய அலைச்சல், வீண் மனஸ்தாபம், சுபசெலவு, சயனசுகக் குறைவு.

**கும்பம்**
தடைப்பட்ட கருமங்கள் நிறைவேறும், கலந்துரையாடல், போசன சுகம், கீர்த்தி.

**மீனம்**
புதிய விடயம், மேன்மை, காரிய சித்தி, விருந்துபசாரம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

***வளவன்***

# நோர்வேயின் உதவியுடன் புவியியல் துறைக்கு வசதிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியறதுறையை விருத்தி செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கும் நோர்வே நாட்டின் ஒஸ்லோ பல்கலைக்கழகத்திற்கும் இடையிலான ஒப்பந்தம் ஒன்று கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

கடந்த 5ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த ஒஸ்லோ பல்கலைக்கழக சமூகவியல் மற்றும் மானிட புவியியற் துறைப் பேராசிரியர் கிறிஸ்டியன் ஸ்றெக்கே, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் கே.குகபாலன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபால கிருஷ்ண ஐயர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் மூன்றாண்டுத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணப் பலகலைக்கழகத்தின் புவியியற்துறை விருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கான நிதியுதவியை நோர்வே வழங்கவுள்ளது. இந்த நிதியுதவியின் மூலம் புவியியற்துறைக்கான ஆளணி, கல்விசார் உபகரணங்கள் பெறப்படுவதுடன், புவியியற்துறை சார்ந்த விரிவுரையாளர்களுக்கான பயிற்சிகள், புலமைப்பரிசில்கள், கருத்தரங்குகள் என்பனவும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இத்துறையின் விருத்திக்கென முதற் கட்டமாக 14லட்சம் ரூபா நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த நிதி மூலம் புவியியற்துறைக்கு தேவையான கணனிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. ஒஸ்லோ பல்கலைக்கழகப் பேராசிரியர் கிறிஸ்டியன் ஸ்றெக்கே கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திற்கு 25ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்களையும் வழங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-121)

# பதுக்கி வைக்கப்பட்ட ஓடுகள் வர்த்தகர் வசமிருந்து மீட்பு

(கொழும்பு)

வறிய மக்களுக்காக வழங்கப்படவிருந்த பெருந்தொகையான கூரை ஓடுகளை கொழும்பு தெமட்டகொட பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் தனது களஞ்சிய அறையினுள் பதுக்கி வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொன்றும் 290இற்கும் மேற்பட்ட கூரை ஓடுகளைக்கொண்ட 12 கொள்கலன்கள் இவ்விதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பொலிஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நடத்திய சுற்றிவளைப்பின்போதே இவ்ஓடுகள் மீட்கப்பட்டன.

இதேவேளை, இது தொடர்பான விசாரணைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறும் மீட்கப்பட்ட கூரை ஓடுகள் தன்னுடையவை என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஜனக மல்லியாராய்ச்சி பொலிஸாரை நிர்ப்பந்தித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(உ-61,8)

# நாட்டிற்காகத் தியாகம் செய்த குடும்பத்தைச் சேர்ந்தவள் நான்

## அவதூறு பேசுவோர்க்கு சோனியா வாய்ப்பூட்டு

(சென்னை)

மக்களிடம் சொல்வதற்குவேறு விடயங்கள் எதுவுமில்லாததால் அ.தி.மு.கவும், பா.ஜ.கவும் என்னையும் எனது குடும்பத்தையும் பற்றி



அவதூறு பேசிவருகின்றன.

நாட்டிற்காக தியாகம் செய்த குடும்பத்தைச் சேர்ந்தவள் நான் என்பதில் மிகவும் பெருமைப் படுகின்றேன்.

சென்னை தீவுத்திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிர கூட்டத்தில் உரையாற்றிய காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

தேர்தல் முடிவு தமிழக அரசுக்கும் எச்சரிக்கையாக அமையும்.

தமிழகத்தில் தி.மு.க. தலைமையில் அமைந்துள்ள கூட்டணி தேர்தலுக்குப் பிறகும் செம்மையாகத் தொடர ஒத்துழைப்பு அளிப்பேன்.

பாஜக.-அதிமுக. கூட்டணியைத் தோற்கடிப்பதற்காக தமிழகத்தில் மதச் சார்பற்ற ஜனநாயக சக்திகள் அனைவரையும் ஒன்று திரட்டி கூட்டணி அமைத்துள்ளமைக்காக தி.மு.க. தலைவர் கருணாநிதியைப் பாராட்டி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன் என்றார்.

தேர்தல் முடிவுகள் மத்தியில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசை அகற்றுவதோடு மட்டுமன்றி அ.தி.மு.க. ஆட்சியின் முடிவு நெருங்கி விட்டது என்று எச்சரிக்கிற அறிகுறியையும் காட்டுவதாக அமைய வேண்டும் னார்.


அவர் மேலும் பேசியதாவது,

அ.தி.மு.க, பா.ஜ.க. கூட்டணியைத் தோற்கடிப்பதைத் தவிர காமராஜருக்கு நாம் செய்கின்ற சிறப்பு வேறு என்னவாக இருக்க முடியும்? அ.தி.மு.க. அரசு அனைத்துத் தரப்பு மக்களுக்கும் துரோகம் செய்து விட்டது. விவசாயிகள், நெசவாளர்கள், மாணவர்கள், அரச ஊழியர்கள் என அனைத்துத் தரப்பு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களைப் பாதுகாக்க அரசு எந்தத் திட்டத்தையும் செயற் படுத்தவில்லை. இந்தியாவின் நெற்களஞ்சியமான காவிரி டெல்டா பாலைவன்மாக மாறி விட்டது. இது பிரதமர் வாஜ்பாயின் தோல்வி ஆகும். காவிரி ஆணையத்தின் தலைவர் என்ற முறையில் இப் பிரச்சினைக்குச் சரியான தீர்வு காணாததால் லட்சோப லட்சம் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தீராத பிரச்சினையாக இருக்கிற தண்ணீர் பற்றாக்குறையைத் தீர்க்க எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

மதச்சார்பற்ற ஜனநாயக ஒருமைப்பாடு கொண்ட இந்தியா என்ற என்னுடைய இலட்சியத்தை பா.ஜ.கவோ, அ.தி.முகவோ சிதைக்க முடியாது. நடைபெறும் தேர்தலில் 40 தொகுதிகளிலும் தி.மு.க காங்கிரஸ் கூட்டணி வேடபாளர்கள் வெற்றி பெறவேண்டும். எங்கள் அணிக்குப் போடும் ஓட்டு சமூக நல்லிணக்கத்திற்குப் போடும் ஓட்டு. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிக்க, மகளிருக்கு 33சத வீத இட ஒதுக்கீடு வழங்க, பெண்களுக்கு அதிகாரம் வழங்குவதற்கு போடுகிற ஓட்டு என்று சோனியா தெரிவித்துள்ளார். (து)



தேர்தல் பிரசாரத்திற்காக சென்னை வந்த பிரதமர் வாஜ்பாயை, நடிகர் ரஜனிகாந் விமான நிலையத்தில் சந்தித்துப் பேசினார். அப்போது இந்திய நதிகளை இணைக்கக்கோரி மனு ஒன்றையும் ரஜனிகாந் வாஜ்பாயிடம் அளித்தார்.

# ஊழல் நிறைந்த இந்தியரை விட நேர்மையான அந்நியரே மேல்

## ராம்ஜெத்மலானி கருத்து

பிரதமர் பதவிக்கு ஊழல் செய் யும் இந்தியர் ஒருவரைவிட நேர் மையான அந்நியராக இருந்தாலே மேல் என்று மத்திய அமைச்சரும் பிரபல வழக்கறிஞருமான ராம்ஜெத்மலானி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நிருபர்களிடம் அவர் கடந்த வெள்ளிக்கிழமை கூறியதாவது,

பிரதமர் பதவிக்கு எந்தக் குற்றச்சாட்டுமில்லாத சோனியா காந்திதான் உகந்தவர். அரசியலிலும் தனிப்பட்ட முறையிலும் ஒழுக்கமானவர் சோனியா காந்தி.

உச்ச நீதிமன்றத்தால் கண்டனத்திற்குள்ளான முதல்வர் ஜெயலலிதாவுடன் பிரதமர் வாஜ்பாய் கூட்டுச்சேர்ந்துள்ளார்.

டான்சி வழக்குத் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் சில மேற்கோள்களின்படி பார்த்தால் ஜெயலலிதா பொது வாழ்வை விட்டு விலக வேண்டும் என்பது தெளிவாகத் தெரியும்.

தேர்தலுக்குப் பிறகு மூன்றாவது அணி ஆட்சி அமைக்கும் என்பது ஏற்புடையதல்ல. தேர்தலுக்குப் பிறகு தேசிய ஜனநாயகக் கூட்டணி அல்லாத ஒரு அரசு அமைய என்னால் முடிந்த வரை பாடுபடுவேன். ஜெயின் ஆணைக்குழுவின் அறிக்கையில் தி.மு.க. குற்றம் செய்ததாக குறிப்பிடப்படவில்லை. எனவே காங்கிரஸுடன் வைத்துக்கொண்ட உறவு குறித்து குறை கூறத் தேவையில்லை.

தி.மு.க. தேசிய மாநாட்டுக் கட்சி ஹரியாணா விகாஸ் கட்சி ஆகியவை வெளியேறி விட்ட நிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி என்ற பெயர் வைத்திருப்பதே அவ் அணிக்குப் பொருந்தாது.

மகிழ்ச்சியாக இருப்பது போன்ற உணர்வு மக்களுக்கு ஏற்படவில்லை மாறாக ஊழல் அரசியல்வாதிகள்தான் நன்றாக இருப்பதாக உணர்கிறார்கள் என்று கூறியுள்ளார்.

(து)

# பாரதிய ஜனதா கூட்டணிக்கு 279 தொகுதிகள் கிட்டும்

(புதுடில்லி)

நாளை நடக்கும் தேர்தலில் பாரதிய ஜனதாக்கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 267 லிருந்து 279 தொகுதிகள் வரை கிடைக்கும் என்று ஸ்டார் நியூஸ் தொலைக் காட்சி நடத்திய கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது. எனவே, தே.ஜ. கூட்டணி பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுவிடும் என்று அக்கருத்துக்கணிப்புக் கூறுகிறது.

இறுதிக் கட்டமாக இன்று தேர்தல் நடைபெறவுள்ள 182 தொகுதிகளில் 62லிருந்து 70 தொகுதிகள் வரை தேசிய ஜனநாயகக் கூட்டணி கைப்பற்றும் காங்கிரஸ் கூட்டணிக்கும் 62 லிருந்து 70 தொகுதிகள் வரை கிடைக்கும்.

இறுதிக்கட்டத் தேர்தலில் இதர கட்சிகளுக்கு 48லிருந்து 56 தொகுதிகள் வரை கிடைக்கக் கூடும் என்றும் அது தெரிவித்துள்ளது.

ஆனால், தமிழ் நாட்டில் முன்னைய தேர்தலில் கிடைத்த இடங்கள் தே.ஜ. கூட்டணிக்குக் கிடைக்காது; தமிழகத்தின் 39 தொகுதிகளில் 30 இடங்களை [illegible] என்றும் அக்கணிப்பு தெரிவித்துள்ளது.

ஸ்டார் நியூஸ், தி டெலிகிராப், தைனிக் பாஸ்கர், சிவோட்டர் ஆகியன இணைந்து அக்கருத்துக் கணிப்பை நடத்தியுள்ளன. (து)

## தே.ஜ.கூ.க்கு 266 இடங்கள்

(புதுடில்லி)

இந்திய மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் மற்றும் எதிர்க் கட்சிகளுக்கு 277 இடங்களும் தேசிய ஐக்கிய கூட்டணிக்கு 266 இடங்களும் கிடைக்குமென்று ஆஜ்தக் டி.வி.கருத்துக்கணிப்பு வெளியிட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலில் 4வது கட்ட வாக்குப்பதிவு முடிவடைந்துள்ளது.இந்தியா டுடே இதழ் நடாத்தும் ஆஜ்தாக் டி.வி .4வது கட்ட வாக்களித்தவர்களிடம் இந்தக்கருத்துக் கணிப்பை நடாத்தியுள்ளது.

அதன் அடிப்படையில் மொத்தமுள்ள 543 தொகுதிகளும் ஒவ்வொரு கூட்டணிக்கும் எத்தனை தொகுதிகள் கிடைக்கு மன்று கருத்து முடிவை வெளியிட்டுள்ளது. (உ)

## இந்தியச் செய்திகள்

### பிரியங்காவின் கணனிவரைபடம்

(புதுடில்லி)

பிரியங்கா குறித்து விஷமத்தனமாக கணனி வரைபடத்தை வெளியிட்ட நாளேட்டுக்கு காங்கிரஸ் கட்சி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது

பிரபல பொப் பாடகி பிரிட்னி ஸ்பயர்ஸ் அணிந்திருப்பது போன்ற ஆடையில் பிரியங்கா இருப்பது போன்ற கணனி வரைபடத்தை மும்பையைச் சேர்ந்த முன்னணி வர்த்தக நாளேடு ஒன்று கடந்த புதன்கிழமை பதிப்பில் வெளியிட்டிருந்தது.

இதைக்கண்டித்து மத்திய மும்பையில் தாதரில் காங்கிரஸ் கட்சியினர் கடந்த வியாழககிழமை ஆர்ப்பாட்டம் நடத்தினர். அந்த நாளேட்டிற்கு எதிரான கோஷங்களை அப்போது அவர்கள் எழுப்பினர். விஷமத்தனமான கணனி வரைபடத்தை பிரசுரித்த அந்த நாளேடு மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(து)



அ.இ.அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து சென்னை தீவுத் திடலில் நடந்த தேர்தல் பிரசாரப் பொதுக் கூட்டத்தில் பிரதமர் வாஜ்பாயும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவும் கலந்துகொண்டு பேசினர். இருவரும் தீவுத் திடலில் திரண்டிருந்த மக்களை நோக்கி உற்சாகமாக கையசைக்கும் காட்சி.

# 40 மில்லியன் பவுண்ஸ்

# பெக்காம் புதிய ஒப்பந்தம்

பிரிட்டனின் உதைபந்தாட்ட அணித் தலைவரும் றியல் மட்ரிட் கழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமும் உலகின் அதிக சம்பளம் பெறும் உதைபந்தாட்ட வீரருமான டேவிட் பெக்காம் 40 மில்லியன் பவுண்சுகளுக்குப் புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துள்ளார்.


ஜில்லெற் நிறுவனத்தின் தயாரிப்புக்களுக்கு விளம்பர மொடலாக இருப்பதற்கே அவர் இவ்வளவு பெரும் தொகைப் பணத்திற்கு ஒப்பந்தமாகியுள்ளார்.



அதேவேளை,ஸ்பெயினின் றியல் மற்றிட் கழகம் இந்த சீசனில் சிறப்பான வெற்றிகளைப் பெறாமல் போனதால் அவர் பிறீமியர் உதைபந்துப் போட்டிகளில் ஷெல்சியா அல்லது ஆர்சனல் கழகத்திற்கு அதிகபணத்திற்கு ஒப்பந்தம் செய்யப்படலாம் என்ற ஹேஸ்யங்களை றியல் மட்ரிட் பயிற்றுவிப்பாளர் கார்லோஸ் குயேறஸ் மறுத்துள்ளார்.

றியல் மட்ரிட் தலைவர் புளோரன்டீனோ பெரசுக்கு அளித்த வாக்குறுதியில் தான் தொடர்ந்து அக்கழகத்திற்காக விளையாடி தமது திறமையை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்திலிருப்பதாக பெக்காம் தெரிவித்துள்ளார். இதேவேளை இங்கிலாந்தின் மஞ்செஸ்டர் யுனைட்டட் கழகத்திற்காக அவர் விளையாடுவார் என்றும் செய்திகள் அடிபடுகின்றன.

(யே)



அமெரிக்காவில் நடைபெறும் தேசிய கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் நேற்று இந்தியானா பேசர்ஸ் அணியும் மியாமி ஹீற் அணியும் மோதின. இப்போட்டியில் இந்தியானா அணியின் றொன் ஆட்ரெஸ்ற் பந்தை லாவகமாகக் கூடையில் போடுவதைக் காண்கிறீர்கள்.

# நாளை நடைபெறும் கிரிக்கெற் போட்டிகள்


யாழ்.மாவட்ட பிரதேச செயலர் பிரிவு அணிகளுக்கிடையே நடாத்தப்பட்டு வரும் மாவட்ட மட்ட கிரிக்கெற் போட்டிகளின் முதல் சுற்றும் மற்றும் இரண்டாம் சுற்றுப் போட்டிகள் உட்பட 4 போட்டிகள் நாளை மல்லாகம் ஆர்.டி.எஸ் விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றன.

இன்று நடைபெறவுள்ள மூன்று போட்டிகள் பற்றிய விபரங்களை ஏற்கனவே தந்திருந்ததுடன் நாளை நடைபெறவுள்ள போட்டிகளின் விபரம் வருமாறு:

காலை 8.30 மணி

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு அணி எதிர் சங்கானை பிரதேச செயலர் பிரிவு அணி.

காலை 11.00மணி



ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவு அணி எதிர் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு அணி.

மாலை 1.00 மணி

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவு அணி எதிர் இன்றைய வேலணை மருதங்கேணி அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றி பெறும் அணி.

மாலை 3.00 மணி

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு அணி எதிர் இன்றைய சாவகச்சேரி, நெடுந்தீவு அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றிபெறும் அணி.

(யே-68)

## சிம்பாப்வே பயணத்திற்காக வீரர்களை நிர்ப்பந்திக்கப்போவதில்லை

சிம்பாப்வே அணியுடன் இவ் வருட இறுதியில் நடைபெறவுள்ள கிரிக்கெற் தொடரில் கலந்துகொள்ளுமாறு இங்கிலாந்து அணி வீரர்களை வலியுறுத்தபபோவதில்



லையென இங்கிலாந்து கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் டேவிற்மோகன் தெரிவித்துள்ளார். பிரித்தானியாவின் வெளிவிவகார செயலாளரான ரெக்ஸ்ரோவுடனான ஊடகவியலாளர்கள் மகாநாட்டின் போதே டேவிற்மோகன் இதனைக் கூறியிருந்தார்.

எனினும் சிம்பாப்வே அணியுடன் நடைபெறவுள்ள கிரிக்கெற் போட்டித் தொடரில் இங்கிலாந்து அணியினர் நிச்சயம் விளையாடுவார்கள் என தான் நம்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்திருந்தார். எவ்வாறாயினும் எதிர்வரும் யூன் மாதம் 8ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற இங்கிலாந்து கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபையின் கூட்டத்தின் பின்னர் இறுதி முடிவெடுக்கப்படவிருப்பதாகவும் இங்கிலாந்து கிரிக்கெற் கட்டுப் பாட்டுச்சபைத் தலைவர் டேவிற் மோகன் கூறியிருந்தார். (யே-68)

# விளையாட்டுச் செய்திகள்

# யாழ். உதைபந்தாட்டம் துரையப்பா அரங்கில் மகளிர் அணித் தெரிவு

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் இம் மாகாணத்தில் உள்ள எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக மகளிர் கால்பந்தாட்டப் போட்டிகள் இவ் ஆண்டு முதல்முறையாக நடாத்தப்பட இருக்கின்றன. இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொள்வதற்காக யாழ்.மாவட்ட அணியில் வீராங்கனைகளை தெரிவு செய்வதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி இ.றொகான் ராஜசிங்கம் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

இதற்கான ஆரம்ப கட்டத் தெரிவுகள் நாளை திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றன. யாழ். மாவட்ட மகளிர் கால்பந்தாட்ட அணியில் விளையாடுவதற்கு ஆர்வமுள்ள வீராங்கனைகளை நாளைய தெரிவு நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறும் அவ.. கேட்டுக் கொண்டுள்ளார்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்தில் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவின் கழகங்களிடையே இம்முறை பிரதேச மட்டத்தில் மகளிர் கால்பந்தாட்டப் போட்டிகள் முதல் முறையாக நடாத்தப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.கால்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொண்ட வீராங்கனைகள் மட்டுமன்றி ஆர்வமுள்ள அனைத்து வீராங்கனைகளையும் இத் தெரிவில் கலந்து கொண்டால் யாழ். மாவட்டத்தில் சிறந்த மகளிர் கால்பந்தாட்ட அணி ஒன்றை உருவாக்க முடியுமெனவும் மாவட்ட விளையாட்டு அதிகாரி தெரிவித்திருந்தார்.

(யே-68)

# யாழ்.பிரதேச அணியிடம் சண்டிலிப்பாய் தோல்வி

யாழ்.மாவட்ட பிரதேச செயலர் பிரிவு உதைபந்தாட்டப் பிரிவு அணிகளுக்கிடையே நடாத்தப்பட்டு வந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரின், இறுதியாட்டம் கடந்த ஆறாம் திகதி பி.ப 4.00 மணிக்கு ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இவ் ஆட்டத்தில் யாழ்.பிரதேச செயலர் பிரிவு தெரிவணி அதனை எதிர்த்தாடிய சண்டிலிப்பாய் பிரதேச பிரிவு, தெரிவு அணியை கடும் போட்டியின் பின் 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது.

யாழ்.அணி பெற்ற கோல்களில் ஒன்றை எடிசனும் மற்றதை சுஜீவனும் போட்டனர். சண்டிலிப்பாய் பெற்ற ஒரு கோலை லோகேஸ்வரன் போட்டார்.

யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி றொகான் ராஜசிங்கம் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட இப் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக, ரி.கருணாநந்தன், வி. சசிவண்ணன்,வி. பாலகரன் ஆகியோர் கடமையாற்றினார்கள்.

(யே-110)



யூபாக் கிண்ணத்தின் இறுதிப்போட்டிக்கு வில்லாறியல் அணியைத் தோற்கடித்துப் பிரான்சின் வலென்சியா அணி முன்னேறியதையிட்டு அவ்வணியின் ஆதரவாளர்கள் மகிழ்ச்சி கொண்டாடுகின்றனர்.

# 2010 ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியை நடாத்த

## ஐந்து நாடுகள் முனைப்பு



2010 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை நடாத்துவதற்கு தென்னாபிரிக்கா, மொரோக்கோ மற்றும் எகிப்து ஆகிய நாடுகள் விண்ணப்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந் நாடுகளை தவிர லிபியா மற்றும் கியூனேசியா போன்ற நாடுகளும் விண்ணப்பிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


இம்மாதம் 14ஆம் திகதி சுவிற்ஸர்லாந்தின் சூரிச் நகரில் நடைபெறவுள்ள சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் பொதுச் சபைக் கூட்டத்தின் போது இந்த ஐந்து நாடுகளும் தமது விண்ணப்பங்களை கையளிக்குமெனத் தெரியவருகின்றது.

இதேவேளை, தென்னாபிரிக்கா சமர்ப்பிக்கவுள்ள விண்ணப்பத்திற்கு தென்னபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா பலத்த ஆதரவினை வழங்கியுள்ளார்.

இந்நிலையில் 2010ஆம் ஆண்டு உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகளை நடாத்தும் வாய்ப்பு தென்னாபிரிக்காவிற்கே கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் போட்டிகளுக்கான ஆயத்த நடவடிக்கைகள் பூர்த்தியானதும் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் நடாத்தும் ஆய்வுகளின் பின்னரே எந்த நாட்டில் போட்டியை நடாத்துவது என்ற இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

(யே-68)

# அயற்றன் சென்னாவின் நினைவுகள்





"அயற்றன் சென்னா"! மலைகளும் பள்ளத்தாக்குகளும், மனித மனங்களும் மறக்க முடியாமல் தவிதவித்து ஏங்கும் இந்த பெயருக்குச் சொந்தக்காரர் ஒரு பிறேஸில் நாட்டவர்.

உலக விளையாட்டுத்துறையில் உன்னத ஸ்தானத்தை வகிக்கும் தேசத்தின் புத்திரன், கார்ச் சக்கரங்களில் கவிதை எழுதிய கலைஞன், திறமை, துணிவு, வீரம், மனிதம் என்பவற்றின் புகலிடமாய் விளங்கிய மாமனிதன் அயற்றன் சென்னா.


போர்மியூலா வண், எனப்படும் உலகின் அதிவேக கார்ப் பந்தயங்களில் இன்று பெராரி கார்களும் மைக்கல் சூமாக்கரும் பெயருடனும் புகழுடனும் வலம் வருவதை உலகம் நன்கறியும்.

தமிழ் இலக்கிய உலகில் கல்யாணசுந்தரம் (பட்டுக்



கோட்டை) இருந்த வரையிலும் கண்ணதாசனால் தலையெடுக்க முடியவில்லை. அரசியலில் சோவியத் யூனியன் உடையாமல் இருந்த வரைக்கும் அமெரிக்கரால் நினைத்தபடியெல்லாம் ஆடமுடியவில்லை. அப்படியே போர்மியூலா வண் பந்தயங்களில் அயற்றன் சென்னா இருந்த வரை எவராலும் அவரை நெருங்கக் கூட முடியவில்லை!

1994ஆம் ஆண்டு மலைகளும் பள்ளத்தாக்குகளும்



நிறைந்த கனேடியன் கிராண்ட் பிறிக்ஸ் ஓடுபாதையில், தொழிலாளர் தினமான மே முதலாம் திகதி காற்றாய் புகுந்து புயலாய்ப் பறந்து கோடான கோடி ரசிகர்களின் மனங்கள் சூறாவளியாய்ப் பதறித் துடிக்கக் கோரவிபத்தில் வீதியை விட்டு விலகி ரசிக மனங்களில் அடைக்கலமானார் சென்னா!

ஒவ்வொரு துறைசார்ந்தும் உலகம் பல முன்னோடிகளைத் தந்துள்ளது. போர்மியூலா வண்(Formula -1) பந்தயச் சாரதிகளுக்கெல்லாம் முன்னோடி: அயற்றன் சென்னாதான். இந்த போர்மியூலா உலகின்பால் ஒரு மாபெரும் ரசிகர் கூட்டத்தை ஈர்த்தது அவருடைய திறமைதான். இந்தத் துறையில் பல சாரதிகளைக் கவர்ந்ததும் அவரது கவர்ச்சிமிகு கரங்கள்தான். வளைவுகளிலும் திருப்பங்களிலும் லாவகமாக அவர் அசுர வேகத்தில் திரும்புவது அவரது துணிவுக்குச் சான்று! எதிர்பாராத விதமாக அவர் போட்டியிடும் கார்கள் இடை வழியில் பழுதானாலும் அதைத் திருத்திக் கொண்டு முதலிடத்தை அடைவது அவரது வீரமா, தன்னம்பிக்கையா அல்லது திறமையா? நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

அவருடைய 10 வருட போர்மியூலா வண் பந்தயங்களில் ஒரு தடவை கூட விதிகளுக்குப் புறம்பாகவோ நீதி விரோதமாகவோ போட்டிகளில் அவர் பெயரெடுத்ததில்லை. அதுதான் மனிதம். அதுதான் விளையாட்டு வீரன் ஒரு கனவான். (A Sportsman is a gentleman) என்பதன் பொருள்.

தனது 10 வருட கால போர்மியூலா வண் பந்தயங்களில் தனது இறுதி 8 வருடங்களும் அவரே சம்பியனாகவும் முதல்தர வீரராகவும் விளங்கினார். போர்மியூலா வண் அமைப்பு 1990இல் நடத்திய வாக்கெடுப்பில் எக் காலத்திற்கும் சிறந்த வீரர் என்ற விருதை உலகம் ஏகோபித்து அவருக்கே வழங்கியது.

தன்னுடைய வாழ்நாளில் சுமார் 170 போர்மியூலா வண் பந்தயங்களில் பங் கெடுத்து 161 போட்டிகளில் அவர் முதலிடம் பெற்றார். இதனால் உலகின் பல முன்னணிக் கார்ப் பந்தய நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு அவரை ஒப்பந்தம் செய்தன.



## கண்ணீர் சிந்திய மக்லரன் தலைவர்

ஓடமுடியாத கார்களும் அவர் ஏறி அமர்ந்தால் பறந்தன. பொருளாதார ரீதியில் மிகவும் பின் நிலையில் நின்ற மக் லரன் நிறுவனத்தின் சிறுமைகண்டு மனம் நொந்த சென்னா 1988இல் மொனாக்கோ கிராண்ட் பிறிக்ஸ் போட்டிகளில் மிகக்குறைந்த சாதாரண கூலிகூடப் பெறாமல் விளையாட்டு உலகில் மக் லரன் தொடர்ந்து இயங்க வேண்டுமென்பதற்காக இனாமாகவே மக் லரன் கார் ஒன்றில் போட்டியிட்டு வெற்றி வாகை சூடினார். அவரின் அந்த வெற்றியால் உலகில் மக் லரன் கார்கள் அமோகமாக விலை போயின. மக் லரனும் நிமிர்ந்தது. சில தினங்களுக்கு முன் மே முதலாம் திகதி சென்னா இறந்த இடத்தினுள்ள அவரது நினைவுத்தூபிக்கு வந்த மக் லரன் நிறுவனங்களின் தலைவர் டேமில் லரன் மலர்ச் செண்டுகளை தூபியில் வைத்து விட்டு கண்ணீர் சிந்தி அழுதார். மனிதம் நிறைந்த அயற்றன் சென்னா அவர் மனதில் வாழ்கிறார் என்பது மட்டுமல்ல உலகம் அதைக் கண்ணாரவும் கண்டுகொண்டது.

பின்நாளில் தான் பங்கு பற்றிய பந்தயங்களிலெல்லாம் மறக்க முடியாதது மக் லரனுடனான மொனோக்கோ பந்தயம் தான் என்று சென்னா சொன்னார்.





அவ்வாறே வில்லியம்ஸ் கார்களை அவர் கைகள் கையாண்ட விதம் பலரையும் வாய் பிளக்க வைத்தது. அது மட்டுமல்லாமமல் றினோல்ட், ஹொண்டா நிறுவனங்களுக்காகவும் அரிய பல சாதனைகளை நிகழ்த்தினார். இந்தச் சாதனைகளின் பிற்பாடுதான் கார்களில் எதுவுமில்லை கைகளில் தான் விஷயம் இருக்கிறது என்பதை உலகம் புரிந்துகொண்டது.

இப்பொழுது சென்னாவின் எதிரிகளும், நண்பர்களும் ஒன்று சேர்ந்து த்மது முன்னோடியின் ஞாபகமாக 45 நிமிட நீளமான திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கிறார்கள். ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற அயற்றன் சென்னா-வின் சகோதரி விவியன் மற்றும் சென்னா வின் காலத்தில் முன்னிலை வீரர்களாகத் திகழ்ந்த டேமன் ஹில், அலெய்ன் புறொஸ்ற், ஜெராட் பேகர் ஆகியோர் இணைந்து இம் முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள்.

சென்னாவின் பெயரில் அறக்கட்டளை ஒன்று நிறுவப்பட்டு ஏழைச் சிறார்களுக்கு கல்வி கற்பதில் உதவிகள் வழங்கப்படுகின்றன. உதைபந்தாட்டத்தின் முடிசூடா மன்னர்கள் வாழும் பிறேஸில் தேசத்தில் சென்னாவின் ஞாபகார்த்த தினம் நினைவு கூரப்பட்டபோது உலகின் முன்னணிக் கார்ப் பந்தய நிறுவ னங்களான, பெராரி, மக் லரன், வில்லியம்ஸ், போர்ஸ்ச், ஹொண்டா, மிற்சுபிஸி, றினோல்ட் ஆகிய நிறுவனங்களின் தலைவர்கள் கூடியிருந்தனர். கனடாவின் கிராண்ட் பிறிக்ஸ் தளத்தில் சென்னா நினைவு கூரப்பட்ட போது போர்மியூலா வண் சர்வதேச அமைப்பின் தலைவர் பின்வருமாறு கூறினார்.

இந்த உலகில் எங்கெல்லாம் மலைகளுக்கும், பள்ளத்தாக்குகளுக்கும் ஊடாக அதிவேக கார்ப்பந்தய பாதைகள் செல்கின்றனவோ, அங்குள்ள மலைகளும், பள்ளத்தாக்குகளும் சென்னாவைத் தேடிக் கொண்டே இருக்கும். அவரது துணிவும், வீரமும், மனித நேயமும் நம்மைவிட அவற்றுக்குத்தான் அதிகம் தெரியும். அவருக்குப் பிறகு போர்மியூலா பாதைகள் லாவகமும், வேகமும், விவேகமும் நிறைந்த தாரகை ஒன்றைத் தேடித் தவம் கிடைக்கின்றன என்றார். அயற்றன் சென்னாவின் 10வது வருட ஞாபகத்திற்கு இக்கட்டுரை அர்ப்பணமாகும்.


பேதுரு யேசுதாசன்



சென்னா இறுதிப் பயணம் மேற்கொண்ட றினோல்ட் கார்

# பிறர் மீது அதிக அன்பு கொள்பவன் ஆண்டவரால் அரவணைக்கப்படுகிறான்

வாழ்க்கையின் ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் அர்த்தமுண்டு. காரணங்கள் இல்லாமல் காரியங் களில்லை. ஏதோ ஒன்றின் அடிப் படையிலே(சக்தியிலே)யாவும்



சீராகவும் சிறப்பாகவும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மனிதன் இயற்கையை விடுத்து, செயற் கையாகப் பலவற்றை சீர்ப்ப டுத்திக் கொண்டிருக்கிறான்.

முற்போக்குத் திட்டங்களை முன்னெடுக்கின்றவன், முரண்பாடு களையும் சந்திக்க வேண்டி யுள்ளது. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையிலும் முற்போக்கான செயற்பாடுகள் செய்தவருக்கு முரண்பாடான எதிர்ப்புக்கள் சவால் விட்டன. கூட இருந்தவனே முத்தமிட்டுக் காட்டிக் கொடுத் தான். பேதுரு இயேசுவை மறு தலித்தார். உயிருக்கு ஆபத்து வரும் என்று பயந்தே அவ்வாறு செய்தார் எனலாம்.

இயேசுவுக்கு எப்படியான கொடுமைகளைச் செய்யப் போகிறார்கள் என்பதை கண் ணாலே பார்க்க வேண்டும். அதன் ஊடாக அவர் பட்ட வேதனை களிலே தானும் பங்குகொள்ள வேண்டும். அதனை மக்களுக்கு எடுத்துக் கூறி சாட்சி பகர வேண் டும் என்று பேதுரு அவ்வாறு நடந் திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கூறுவர்.

### தேர்ந்து கொள்ளப்பட்டவர் சிலரே

தூய்மையின் இருப்பிடமான விண்ணகத்தில் இருந்தே இயேசு கிறிஸ்து மண்ணுலகில் மானிட வடிவம் எடுத்தார். அவர் தாம் வந்த காரியத்தை நிறைவேற்றி விட்டு மீண்டும் வந்த இடத்துக்கே

## பரமபிதா காட்டிய பாதை

சென்றுவிட்டார்.

இயேசு இவ்வுலகில் இருக்கும் போதே தம்முடைய நிலைப் பாட்டை சீடர்களுக்கும், யூதர்க ளுக்கும் வெளிப்படுத்திக் கூறி னார். ஆனால் அநேகர் அவரின் வெளிப்படுத்தலை உணர்ந்து கொள்ளவில்லை.

இறையருள் பெற்றிருந் தவர்களுக்கே இயேசுவின் செய்தி விளக்கமானதாக அமைந்தது. அவர்களே அவ்வார்த்தைகளின் உண்மையான அர்த்தங்களைப் புரிந்து கொண்டார்கள். மேலும் இயேசு "நான் செல்லும் இடத் துக்கு உங்களால் வரமுடியாது" (யோவான் 13:33) என்று திட்ட வட்டமாகக் கூறினார். காரணம் அதற்கான அனுமதியை வழங்கு பவர் பரமபிதா ஒருவரே ஆகும்.

பரமபிதாவின் சித்தப்படி வாழ்ப வர்களுக்கே அவை அருளப் படுகின்றன. "அழைக்கப்படுபவர் கள் பலராக இருந்தும் தேர்ந்து கொள்ளப்படுபவர்கள் சிலரே" என்று இயேசு பெருமான் தாமே கூறியிருக்கின்றார்.

### கடவுள் அரசையே தேடுங்கள்

மனிதர்கள் இவ்வுலகச் செல் வங்களைத் தேடிக் குவிப்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கின் றார்கள். கடவுளின் அரசையும் அதற்கு உரியவைகளையும் தேடு பவர்கள் மிகச் சிலரே. "கடவுளின் அரசையே முதலில் தேடுங்கள். மற்றவை அனைத்தும் உங்க ளுக்குச் சேர்த்துக் கொடுக்கப் படும்" (லூக். 12:31)

நாம் செய்ய வேண்டியதைச் செய்யாமல் சேகரிப்பதிலே கண் ணும் கருத்துமாய் இருப்பதால் நிறைவு என்பது எமக்கு வரப் போவதில்லை. "போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து" என்பது தமிழ் முதுமொழி. கிடைப் பதுடன் நிறைவைக் காண்பவன் யாரென்றால் முதலில் கடவுளைத் தேடுபவன். எல்லாவற்றையும் செய்து முடித்து போலியாக கௌர வத்திற்காக கடவுளைத் தேடுபவன நிறைவைக் கண்டடைய மாட் டான். அவன் பணத்தாசையாலே அலைவான். "ஞானத்தின் மேல் ஒருவன் தன் சிந்தனையை நிறுத் தினால், அதுவே அவனுக்கு அறி வின் நிறைவு. அதனை அடைய விழிப்பாய் இருப்பவன் விரைவில் கவலைகளில் நின்று விடுபடு வான்" (ஞான. 6:16) என்று ஞான ஆகமம் குறிப்பிடுகின்றது.

### அன்பினாலே ஆண்டவனைக் காணலாம்

அன்பு செய்கிறவன் ஆண்ட வராலே அரவணைக்கப்படுகின் றான். அலைக்கழிக்கப் பண் ணுகிறவன் தண்டனையின் படிக் கட்டுக்களை நோக்கி நடக்கி றான். எனவேதான் நம் ஆண்டவர் இயேசு தம் சீடர்களுக்குக் கூறி னார். "நீங்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொண்டிருந்தால்தான் நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்" (யோவான் 13:31).

நீங்கள் ஒரே மனத்தவராய் வாழுங்கள் என்று கூறிய இயேசு வின் வார்த்தைகளை நாம் ஒவ்வொருவரும் பின்பற்றுகின் றோமா? அடுத்தவர் தன் துன்பத் தைக் கூறும்போது அது என் னால் முடியாது அவரல்லோ

**அபி. அருள்தாசன்**

செய்ய வேண்டுமென்று எம் கட மைகளைத் தட்டிக் கழித்து நிர் வாக வீரர்களாக இறைவார்த் தைக்குப் பிழையான அர்த்தம் கொடுக்கிறார்கள் பலர். பணிவும், பண்பும், பிறரன்பும் எம்மில் மலர இறைவா அருள் புரிவாய ★

## தீவகத்திற்கான போக்குவரத்தில் சிரமம்

(மண்கும்பான்)

தீவுப்பகுதிப் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளின் எண்ணி க்கை போதாமல் இருப்பதால் பேருந்துகளில் அளவுக்கதிகமா னோர் பயணிக்கும் நிலை இருப் பதுடன், இந்த நிலைப்பாட்டினால் நோயாளர்கள் மற்றும் அலுவ லர்கள் பெரிதும் சிரமமுற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

இதேவேளை, தீவகத்தில் பெரும் பாலும் பேருந்துத் தரப்பிடம் இல்லை என்பதால் பயணிகள் வெய்யில் மற்றும் மழை மத்தி யில் பேருந்திற்காகக் காத்து நிற் கின்ற அவல நிலையும் தொடர் கின்றது. (உ-56)

## மகஜர் கையளிக்கத் தீர்மானம்

(அளவெட்டி)

வடமாகாணத்தைச் சேர்ந்த கல்வியற் கல்லூரிகளில் கற்று விட்டு இருப்போர்க்கான கூட்டம் கடந்த புதன்கிழமை புதிய உயர்கல்லூரியில் நடைபெற்ற போது, கல்வியியற் கல்லூரிகளில் கற்று வெளியேறிய ஆசிரியர் களுக்கான உரிய நியமனங்கள் இதுவரை வழங்கப்படாதமை குறித்து தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மகஜர் ஒன்று கையளிப்பது எனத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அடுத்த கூட்டம் எதிர்வரும் ஜூன் மாதம் 2ஆம்திகதி புதன்கிழமை மு.ப. 10.00மணிக்கு புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-83)

## விண்ணப்பம் கோரல்

(கந்தர்மடம்)

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்புIIபிரிவு'ஆ'பிரிவு'அ'அலு வலர்களுக்கான Iஆம்,IIஆம் வினைத் திறமை காண் தடைப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் வடக்கு-கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழுவினால் கோரப்பட்டுள்ளன. (உ-85)

★ ★ ★

(கந்தர்மடம்) -

இலங்கைத் தொழில்நுட்பவி யல் சேவையின் சிவில் படவரை ஞர் பதவிகளின் பயிலுநர் தரங் களுக்கு ஆட்சேர்ப்புச் செய் யப்பட்டவர்களை இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் சிவில், படவரைஞர் வகுப்பு II பிரிவு "ஆ" பதவிகளுக்கு நியம ணம் வழங்குவதற்கான தகைமை காண் பரீட்சை எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு வினால் இதற்குத் தகுதியானவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உரிய விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்பதாக "செயலாளர் வட.கிழக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு, திருகோண மலை" எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ-85)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலயத்தில் தமிழ்மொழி உதவிக்கல்விப் பணிப் பாளருக்கான விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு 1 அல்லது வகுப்பு 2 தரம் Iஐச் சேர்ந்த தமிழ்மொழியில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி 31.05.2004 ஆகும். (உ)

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் கோவிலின் வருடாந்த மஹோற்சவம இன்று ஞாயிற்றுக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர் ந்து 12 நாட்கள் நடைபெறவுள் ளது.

எதிர்வரும் 14ஆம்திகதி வெள் ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும் 17ஆம்திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த் தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (உ-18)

## விலங்கு விசர் நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யா/மாநகரசபை எல்லைக்குட் பட்ட வளர்ப்பு நாய்களுக்கு 3வது கட்ட விலங்கு விசர் நோய்த் தடுப் பூசி ஏற்றப்படவுள்ளது.

இந்தவகையில், நல்லூர் சிகி ச்சை நிலையம், மூத்த விநாய கர் சனசமூக நிலையம், சங்கி லியன் பொதுப்பணி மன்றம் ஆகிய வற்றில் வைத்து எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமையும், கொண்ட லடி சனசமூகநிலையத்தில் வைத்து 12ஆம் திகதியும்,

வள்ளுவர் ச.ச. நிலையம், காமாட்சி சனசமூகநிலையம் ஆகிய வற்றில் 12ஆம் திகதியும் ஆத்தி சூடி ச.ச.நிலையம் நீராவியடி ச.ச. நிலையம்,வேம்படி ச.ச.நிலையம் ஆகியவற்றில் 13ஆம் திகதியும் கலைவாணி ச.ச.நிலையம், ஒஸ் மானியாக் கல்லூரி அருகாமை ஆகியவற்றில் 18ஆம் திகதியும் இவ் விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (உ)

## நாற்று மேடை நாசம்

(இணுவில்)

உடுவில், இணுவில், கோண்டா வில் பகுதிகளில் விவசாயிகளினால் அடுத்த போகத்திற்காக போடப்பட்ட மிளகாய், கத்தரி, லீக்ஸ், பீற்றூட் போன்ற நாற்று மேடைகள் தொடர்ந்து பெய்த மழையினால் பாதிப்படைந்து வெள்ளத்தில் மிதக்கின்றன. (உ-122)

## அடிக்கடி மின் தடை

(காரைநகர்)

காரைநகருக்கான மின்சார வழங்கல் சீரற்ற முறையில் உள்ளதாக பொதுமக்கள் தெரிவித் துள்ளனர். காரைநகருக்கு 24 மணி நேர மின்சாரம் கிடைக்கின்ற போதும் அடிக்கடி மின்சாரம் தடைப் பட்டு வருகின்றது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் எதுவித நடவடிக்கையும் மேற் கொள்ளவில்லை எனத் தெரிவிக்க ப்படும் அதேவேளை, சட்டவிரோத மாக மின்சாரம் பெறுவோரின் எண்ணிக்கையும் இப்பகுதியில் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (உ-246)

## விபத்தில் சிறுமி பலி 18 பேர் காயம்

(கொழும்பு)

கொழும்பு பம்பலப்பிட்டி டுப்ளிக் கேசன் வீதிச்சந்தியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற மோட்டார் வாகன விபத்தில் 14 வயதுச் சிறுமி உயிரிழந்ததுடன், 18 பேர் படு காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

வெசாக் பந்தலை பார்வையி டுவதற்காகச் சென்றவர்களே இவ் வாறு விபத்தில் சிக்கி காயமடைந் துள்ளனர். (உ-60,10)

## நிலக்கண்ணி வெடி அகற்றும் பணி நாளை ஆரம்பம்

(கொழும்பு)

வடக்கில் கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கை களின் போது புதைக்கப்பட்ட நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் நாளை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்கவால் திடீரென பாராளு மன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்தும் நாட்டில் நிலவிய அரசியல் குழப்பங்களை அடுத்து, கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந் தன.

இந்தியா,சுவிட்சர்லாந்து, அமெ ரிக்கா,ஹொலண்ட் மற்றும் ஜப் பான், நோர்வே போன்ற நாடு களைச் சேர்ந்த உறுப்பினர்களை உள்ளடக்கியதான மேற்படி கண் ணிவெடி அகற்றும் குழு இடை நிறுத்திய பணிகளே மீண்டும் நாளை முதல் ஆரம்பிக்கப்பட வுள்ளன.

மேற்படி வெளிநாட்டு மிதிவெடி அகற்றும் குழுவினர், தமது பணி களை மேற்கொள்ளும்போது, அதிநவீன உபகரணங்களைப் பயன்படுத்தவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (உ-121)

## உட்கட்டமைப்பு வசதிகளில் முதலீட்டாளர் அதிக அக்கறை

(கொழும்பு)

நாட்டின் முதலீட்டுத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர் பாகவும், அம்முதலீட்டுத் திட்டங் களை ஆரம்பிப்பதில் உள்ள தடைகளை நீக்குவது குறித்தும் கைத்தொழில் சுற்றுலா மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கவனம் செலுத்தி வருகிறார்.

மேற்படி விடயங்கள் குறித்து நேற்று முன்தினம் அமைச்சின் உத்தியோகத்தர்களுடன் முக் கிய கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன்போது "முதலீட்டுத்திட் டம் ஆரம்பிப்பது குறித்து சிரம மான திட்டமொன்றை விரைவில் அமுல் செய்வது" என்ற தீர் மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையில் நீர் மற்றும் மின் சாரம் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளைத் தாமதமில்லாமல் பெற்றுக்கொள்வதில் முதலீட்டா ளர்கள் அதிக அக்கறை கொண் டுள்ளனர். எனவே இதில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய அமைச்சர்களுடன் மிக விரைவில் பேச்சுக்களை நடாத்தி சிறந்த தீர்வுகளை அவர்களுக்குப் பெற்றுக்கொடுப்போம் என உறுதி யளித்துள்ளார். (உ-121)

## அனைத்து அரசியல் கட்சிகளின் கூட்டம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பிரதிநிதித் துவம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் கலந்துகொள்ளும் கூட்டம் ஒன்று எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை நடை பெறவுள்ளது.

இம்மாதம் 18ஆம்திகதி ஆரம்ப மாகவுள்ள பாராளுமன்ற அமர் வில் இடம்பெறவேண்டிய நிகழ்ச் சிகள் குறித்து தீர்மானம் எடுப் பதற்காகவே இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற அமர்வில் பிரதி சபாநாயகர், பிரதம கொறடா ஆகியோர் தெரிவு செய்யப்படுவதுடன், ஐக் கிய மக்கள் சுதந்திர முன்ன ணியைச் சேர்ந்த ரத்னசிறி விக் கிரம நாயக்க, மேவின் சில்வா ஆகியோர் பாராளுமன்ற உறுப்பி னர்களாக சத்தியப்பிரமாணம் செய்யும் நிகழ்வும் இடம்பெற வள்ளகு. (உ-60.10)

# பள்ளி வாசல் குண்டு வெடிப்பில்
# 15 பேர் பலி 90 பேர் காயம்
## கராச்சி நகர் கதிகலங்கியது

(கராச்சி)

நேற்றுப் பாகிஸ்தானின் கராச்சி நகரிலுள்ள பள்ளிவாசல் ஒன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 15 பேர் கொல்லப்பட்டதுடன் சுமார் 90 பேர் படுகாயங்களுக்குள்ளானதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஸ்தலத்திற்கு விரைந்த பொலிஸாரின் அறிக்கைப் படி இது ஒரு தற்கொலைக் குண்டுத்தாக்குதல் என்று தெரியவருகிறது. குண்டு வெடிப்பைத் தொடர்ந்து ஆத்திரமுற்ற பொதுமக்கள் நகரிலுள்ள கட்டடங்களுக்குத் தீ மூட்டினர். பொலிஸார் நூற்றுக்கணக்கான பொதுமக்களைக் கலைப்பதற்குத் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர்.



இது பயங்கர வாதிகளின் காட்டுமிராண்டித்தனமான செயல் என்று ஜனாதிபதி முஷாரப் கண்டித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 1.00 மணியளவில் தொழுகை முடிந்த பிற்பாடு பள்ளிவாசலினுள் இக்குண்டு வெடித்தது. "பள்ளிவாசலின் தளமெங்கும் இரத்தமும் மனித தசையும் பரவிக் கிடந்தன. காயமுற்றவர்கள முனங்கியபடி அங்குமிங்கும் விழுந்து கிடந்தனர்.

அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வ தில் பொதுமக்கள் முனைப்பாக ஈடுபட்டிருந்தனர்" என்று குண்டு வெடிப்பில் அகப்பட்டுக் காயங்களுடன் உயிர் தப்பிய ஒருவர் கூறினார்.

(யே)

# பின்லேடன் மிரட்டினும் பணியைத் தொடர்வேன்
## ஐ.நா. செயலர் அனான்

(ஜெனீவா)



தனது தலைக்கு ஒஸாமா பின்லேடன் விலையை நிர்ணயித்திருந்தாலும் பாதுகாப்பு முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டு தனது பணியைத் தொடரப் போவதாக ஐ.நா செயலர் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

ஐ.நா செயலர் கோபி அனான் அவரது ஈராக்கிற்கான ராஜதந்திரி லக்தார் பிரஹிமி மற்றும் ஈராக்கிற்கான தலைமை நிர்வாகி போல் பிறீமர் ஆகியோரைக் கொலை செய்வோருக்கு 10 கிலோகிராம் தங்கம் சன்மானமாக வழங்கப் போவதாக ஒலி நாடா மூலம் ஒஸாமா பின்லேடன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே, தாம் பணியைத் தொடரப் போவது குறித்து அனான் அறிவித்துள்ளார். ஜூன் மாதம் 30ம் திகதி சுதேசிகளிடம் ஈராக்கிய நிர்வாகத்தை வழங்க ஐ.நாவும் அமெரிக்காவும் முனைந்துள்ள இவ்வேளை, ஐ.நா சபை சியோனிஸ வாதிகளின் கருவியாக இயங்குகிறது என்று தனது 30 நிமிட உரையாடலில் ஒஸாமா குறிப்பிட்டுள்ளார்.

ஒலிப்பதிவு நாடாவிலுள்ளது ஒஸாமாவின் குரல் என்று நம்பப்பட்டாலும், இரகசிய மற்றும் புலனாய்வு நிபுணர்கள் அதனை உறுதிப் படுத்தவில்லை.

(யே)

# ரி. வி. பியின் போலந்து நிருபர்
# ஈராக் நாட்டில் கொலை!
## மொத்தம் 27 பத்திரிகையாளர்

(பக்தாத்)

நேற்று முன்தினம் பக்தாத்துக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் போலந்து நாட்டின் மிகப் பிரபலமான யுத்த காலப் பத்திரிகையாளர் வோல்டெமார் மிலேவிச்சும் அவரது ரி.வி.பி நெற்வேக் நிறுவனத் தயாரிப்பாளர் மோனிர் போலாம்றெனும் உயிரிழந்தார்.

கடந்த ஜனவரி மாதம் இரண்டு சி.என்.என் தொலைக்காட்சி ஊழியர்கள் கொல்லப்பட்ட அதே இடத்திலேயே இச்சம்பவமும் இடம்பெற்றுள்ளது. சம்பவ இடத்தில் நின்ற பொதுமக்களின் தகவல் படி ஈராக்கில் பத்திரிகையாளர்களையே இனி அதிகம் கொல்லப் போவதாக ஆயுததாரிகள் அறிவித்துள்ளனர்.






இவர்கள் பயணம் செய்த வாகனம் (press) எனும் பத்திரிகையாளருக்குரிய அடையாளம் தாங்கியபடி பயணித்திருக்கிறது. 2003 மார்ச்சில் ஈராக் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது முதல் இதுவரை 27 பத்திரிகையாளர்கள் தமது உயிரை ஈராக்கில் இழந்துள்ளனர். உலகில் பத்திரிகையாளருக்கு ஆபத்தை விளைவிக்கும் அதிபயங்கர நாடாக ஈராக் விளங்குவதாக நியூயோர்க்கிலுள்ள பத்திரிகையாளர் பாதுகாப்புச் சங்கம் அறிவித்துள்ளது.

இதேவேளை, போலந்தின் ரி.வி.பி.தொலைக்காட்சி தனது மாலைச் செய்தியை மிலேவிச்சுக்கு அஞ்சலியுடன் ஆரம்பித்தது. போலந்துப் பிரதமர் மரெக் பெல்கா தனது இரங்கலில் உலகை அப்படியே எமக்குக் காட்டுவதற்காக அவர் தமது உயிரை இழந்தார் என்று அறிவித்தார்.

(யே)


# நேபாளப் பிரதமர் பகதூர் இராஜினாமா

(காத்மண்டு)

நேபாளப் பிரதம மந்திரி சூரிய பகதூர் தாபா தனது பதவியை இராஜினாமாச் செய்துவிட்டதாக அரச தொலைக்காட்சி மற்றும் வானொலியில் அறிவித்தார்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நேபாளத்தில் நடைபெற்ற அடுத்த நாள் இவரின் இராஜினாமா அறிவிப்பு வெளியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை 2002ம் ஆண்டு மன்னர் கயனேந்திரா கலந்து அரசருக்கு விசுவாசமானவர்களால் அரசாங்கத்தை இயக்கத் தொடங்கினார். இதைத் தொடர்ந்து பாரிய ஆர்ப்பட்டங்களும், ஊர்வலங்களும் நாட்டில் வெடித்தன. மீண்டும் ஜனநாயக ஆட்சிக்கு வழிகோலுமாறு மன்னரைக் கோரி மக்கள் வீதியில் இறங்கினர். 76 வயதான தாபாவுக்குப் பதிலாக இன்னுமொருவர் நியமிக்கப் படுவாரா அல்லது தேர்தல்கள் நடாத்தப்படுமா என்பது பற்றி எதுவும் தெரியவில்லை. தனது இராஜினாமா நாட்டின் ஒரு மைப்பாட்டுக்கும், அமைதிக்கும் வழி வகுக்கும் என்று தான் நம்புவதாக தாபா கூறினார்.



1996 தொடக்கம் நேபாளத்தில் மன்னராட்சியை நீக்கி கொம்யூனிஸ் ஆட்சியைக் கொண்டு வருவதற்காக மாவோ கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதல்களில் இதுவரை 9000 பேர் உயிரிழந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

(யே)

# சதாம் நடிக்கவில்லை புஷ் நாடகமாடுகிறார்
## முக்தாடா - அல் - சர்தார்

(பக்தாத்)

ஈராக்கில் ஜனநாயகத்தைக் கொண்டு வருகிறோம் என்று வந்த அமெரிக்கர்கள் சதாம் ஹுசெய்ன் செய்ததையும் விடமிகக் கேவலமான செயல்களைச் செய்கிறார்கள். சதாம் ஒருபொழுதும் இவ்வாறு நடிக்கவில்லை ஆனால் புஷ் தான் நாடகமாடுகிறார் என்று மெஹ்டி தீவிரவாத அமைப்பின் தலைவரும் மதகுருவுமான முக்தாடா - அல் - சர்தார் தனது வெள்ளிக்கிழமை சமயப் பேருரையில் குறிப்பிட்டார்.



அவரது கட்டுப்பாட்டிலுள்ள நஜாப் நகரிலுள்ள கு.்.பா பள்ளிவாசலுக்கு அவர் வந்தபோது ஆயிரக் கணக்கான முஸ்லிம் மக்கள் அவரை வரவேற்று "அல்-சர்தாரை எவரும் வீழ்த்த முடியாது" என்று கோஷமெழுப்பினர்.


ஈராக்கியக் கைதிகளை மிகவும் கேவலமாக நடத்தி ஜனநாயக வாதியான ஜோர்ச்புஷ் வெட்கமின்றி அரபுலகின் முன்னின்று வாய் திறந்து பேசுகிறார். அமெரிக்கர்கள் புரிந்த குற்றங்களுக்கு நாம் தண்டனை வழங்குவோம், நஜாப்பிலும், கர்பாலாவிலும், மவுசுலிலும் அவர்கள் நிம்மதியாகத் தூங்கமாட்டார்கள். அவர்களை இங்கிருந்து விரட்டியடிக்குமட்டும் நாமும் தூங்கமாட்டோம் என்றார் அவர்.

(யே)


# குற்றத்தை ஒப்புக்கொண்ட ரொனால்ட் ரம்ஸ்பீல்ட்

(வாஷிங்டன்)

ஈராக்கியக் கைதிகள் விவகாரத்தில் செனட்டின் ஆயுத சேவைகள் குழுமுன் நேற்று முன்தினம் சாட்சியளித்த அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டார்



பாதுகாப்பு அமைச்சராக நான் இருக்கும் பொழுது என்னுடைய கண்காணிப்பின் கீழ் இயங்குகின்ற பாதுகாப்புப் படைகளால் நடாத்தப்பட்ட கைதிகள் துஷ்பிரயோகத்திற்கு நான் பொறுப்பேற்கின்றேன். பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் இதன் தார்ப்பரியம் குறித்து ஜனாதிபதிக்கும் காங்கிரஸிற்கும் உரிய நேரத்தில் அறிவிக்க முடியாதபடி நான் இருளில் வைக்கப்பட்டிருந்தேன். இவ்விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள கைதிகளுக்கு முழு நிவாரணம் வழங்கப்படுவதோடு குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என்று உறுதி கூறுகிறேன் என்றார். ஈராக்கிய விவகாரம் அமெரிக்கர்களுக்கு உலகெங்கும் பாரிய தலைகுனிவை ஏற்படுத்தியதையடுத்து ரம்ஸ்பீல்ட் பதவி விலக வேண்டுமென்று அமெரிக்காவில் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டன. தமது குற்றத்திற்காக ஈராக்கியர்களிடம் மன்னிப்புக் கோரிய ரம்ஸ்பீல்ட் தனது சேவை நாட்டுக்கு அவசியமானால் தான் தொடர்ந்தும் பதவியில் நீடிக் கப் போவதாகவும், இராஜினாமாச் செய்யும் உத்தேசம் எதுவுமில்லையென்றும் தெரிவித்தார்.




(யே)

ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும் -குறள்

வலம்புரி

## நோர்வேஅரசுக்கு முக்கிய பொறுப்புண்டு

இலங்கையின் இனவிவகாரத்தில் அரசுக்கும்-விடுதலைப்புலிகளுக்குமிடையிலான சமாதான முயற்சிகளில் அனுசரணையாளராகச் செயற்படும் நோர்வேயின் பொறுப்பு மிகவும் கடினமானதும், சிக்கலானதுமாகும்.

அரசையும்- விடுதலைப்புலிகளையும் சமாளித்து இருதரப்பும் குற்றஞ்சாட்டாத வகையில் நடந்து கொள்வதென்பது இலகுவான காரியமன்று. இருந்தும் இது விடயத்தில் நோர்வேயின் முன்னெடுப்புகள் மிகவுழ் நிதானமாகவும் -அவதானமாகவும் நகர்த்தப்படுவது பாராட்டுக்குரியது.

இருந்தும் அரசும்-புலிகளும் நடத்தும் சமாதானப் பேச்சுக்களின் போது - வெறும் ஏற்பாட்டாளர் என்ற ஸ்தானத்தில் மட்டும் இருந்து கொண்டு நோர்வேயினால் எதனையும் சாதித்து விட முடியாதென்பது அரசியல் அவதானிகளின் கருத்து.

நோர்வேயைப் பொறுத்தவரை பேச்சுக்கான ஏற்பாடுகளை - களநிலைமைகளை ஒழுங்கு செய்வதுடன் தனது பணி நிறைவடைந்துவிடுவதாக கருதிக்கொள்கிறது. இந்நிலைப்பாடு நோர்வேயின் கொள்கைக்கு சரியானதாக இருப்பினும், பேச்சுக்களில் ஈடுபடுகின்ற இரு தரப்பும் தமது பொறுப்புக்களிலிருந்து விலகிக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும். இதற்கு கடந்தகால சம்பவங்கள் சான்றாகும்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்னெடுத்த சமாதானப் பேச்சுக்கள் இடைநடுவில் நின்று போவதற்கு அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வேக்கு எதுவித அதிகாரமும் இல்லாததே காரணமாகும்.

அதாவது இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்வதன் அவசியம் பற்றியும், விடுதலைப் புலிகள் மாநாட்டில் கலந்து கொள்ளாது விடின் அது சமாதான முயற்சிகளைப் பாதிக்கும் என்ற செய்தியையும் நோர்வே இலங்கை அரசிற்கும், அமெரிக்காவுக்கும் எடுத்துக் கூறியிருக்குமாயின் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்கின்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

அத்தகையதொரு வாய்ப்பு ஏற்பட்டிருக்குமாக இருந்தால் ஐக்கிய தேசியமுன்னணி அரசுடன் முன்னெடுத்த சமாதான முயற்சிகள் தடைப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லாது போயிருக்கும்.

எனவே டோக்கியோ மாநாட்டில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய அதிகாரம், அரசுக்கும் புலிகளுக்குமிடையில் சமாதான ஏற்பாட்டாளராகச் செயற்பட்ட நோர்வேக்கு இருந்திருக்க வேண்டும்.

இந்த உண்மையை நோர்வே உணர்ந்திருப்பின் எதிர்வரும் சமாதானப் பேச்சுக்களின் போதாவது நோர்வே தனக்கு இருக்கவேண்டிய, இருக்கக் கூடியதான அதிகாரங்களை இருதரப்பு மூலமும் உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

சமாதானப்பேச்சுக்களின் போது ஏற்படக்கூடிய சறுகல்களைத் தடுத்து நிறுத்தக்கூடிய வலுவை நோர்வே பெற்றுக்கொள்ளும் போதே சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமான முறையில் முன்னெடுத்துச் செல்லமுடியும.

அவ்வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெறப்போகும் சமாதனப் பேச்சுககளுக்கு முன்னதாக ஐந்து அம்சக்கோரிக்கையை நோர்வே இலங்கையரசிடம் முன்வைத்துள்ளது. நோர்வே முன்வைத்துள்ள ஐந்தம்சக் கோரிக்கைகளாவன,

★ பேச்சுவார்த்தை விடுதலைப்புலிகளுடன் மாத்திரம் இடம்பெற வேண்டும்.

★ வெளிநாட்டுதவிகளைப் பெறும் நோக்கத்திற்காகப் பேச்சுவார்த்தையை பயன்படுத்தக் கூடாது.

★ பேச்சுக்களுக்கான முழுப்பொறுப்பையும் ஜனாதிபதியே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

★ குறித்த ஒரு நேர அட்டவணைக்குள் பேச்சுவார்த்தை முடியும் என்ற உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும்.

★ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால வரைபின் அடிப்படையில் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

நோர்வேயினால் முன்வைக்கப்பட்ட மேற்போந்த கோரிக்கைகள் சமாதான முயற்சியில் அந்நாடு பெற்றுக்கொண்ட அனுபவத்தின் திரட்சியாகும்.

ஆக, நோர்வேயினால் இலங்கை அரசிடம் முன்வைக்கப்பட்ட ஐந்தம்சக்கோரிக்கையானது சமாதான முயற்சியில் ஈடுபட்டுவரும் நாடு என்ற வகையில் நோர்வேயின் முக்கிய பொறுப்பு ஆகும்.

# ஜனாதிபதியின் உத்தரவை அமைச்சர்கள் உதாசீனம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் வெளியே செல்லும்போது பயன்படுத்தப்படும் பாதுகாப்பு வாகனங்களின் தொகையைக் குறைக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிறப்பித்துள்ள உத்தரவை சில பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் அலடசியம் செய்து வருவதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களுமே இவ்வாறு நடந்து கொள்வதாகவும் இதனால் தாம் போக்குவரத்துச் செய்வதில் பல சிக்கல்களை எதிர் நோக்குவதாகவும் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பாதுகாப்பு வாகனங்களைப் பயன்படுத்தி போக்குவரத்தில் ஈடுபடுவதால் அந்தப் பாதையால் செல்லும் தங்கள் பயணம் தாமதமடைவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

இதேவேளை, ஜே.வி.பியில் அங்கம் வகிக்கும் சில அமைச்சர்கள் பாதுகாப்பு வாகனங்களைப் பயன்படுத்தாமல் சாதாரணமாகவே பயணிக்கின்றார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜே.வி.பியினரால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனததில் அமைச்சர்கள் பாதுகாப்பு வாகனங்களை அதிகம பயன்படுத்தக்கூடாது என்றும் அவர்கள் ஆடம்பர செலவுகளில் ஈடுபடக்கூடாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமை தெரிந்ததே. (உ-60,10)

## இனவாத தூண்டல் சக்தி மறைமுகமாக இயங்குகிறது

### பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

இலங்கையில் இனவாதத்தைத் தூண்டும் அரசியல் சக்தியொன்று மறைமுகமாக இயங்க ஆரம்பித்துள்ளதாக பொலிஸமா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் கருத்துத் தொிவித்துள்ள இந்திரா டி சில்வா,

கந்தப்பொல சம்பவமும், களுத்துறை இங்கிரிய சம்பவமும் இனவாத சக்திகளின் தூண்டுதல்களுக்கு நல்ல உதாரணம்.

அத்துடன், இத்தகைய சம்பவங்கள் இனிமேலும் இடம் பெறாத வண்ணம் விரைவில் முற்றுப்புள்ளி வைத்து விடுவோம்.

இத்தகைய சம்பவங்கள் இடம்பெறும் போது பொலிஸார் பாரபட்சமற்ற முறையில் கடமையாற்ற வேண்டுமெனத் தாம சகல பொலிஸாரையும் அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (உ)

## நெல்லைச் சந்தைப்படுத்த முடியாது மண்கும்பான் விவசாயிகள் கவலை

(மண்கும்பான்)

மண்கும்பான் பிரதேச விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த நெல்லைச் சந்தைப்படுத்த முடியாது திண்டாடி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுதத நடவடிக்கைகள் காரணமாக 15 வருடங்களின் பின்னர் பெருத்த பணச் செலவின் மத்தியில் கடந்த வருடம் நெற் செய்கையில் ஈடுபட்டதாகத் தெரிவித்த இவ் விவசாயிகள், தாம் அறுவடை செய்த நெல்லைச் சநதைப்படுத்த முடியாதிருப்பதால் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியிருப்பதாகக் கவலை வெளியிட்டனர். (உ-54)

## கிளிநொச்சி மாவட்டத்தில் 145 முன்பள்ளிகள் இயங்குகின்றன

### முன்பள்ளி கல்வி மேம்பாட்டு இணைப்பாளர்

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்ட சிறார்களின் நலன்கருதி 145 முன்பள்ளிகள் இயங்கிவருகின்றன. இவற்றில் 5 ஆயிரத்து 123 சிறார்கள் கல்வி கற்று வருவதாக கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு இணைப்பாளர் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 1994 ஆம் ஆண்டில் முன்பள்ளிச் சேவையினை ஆரம்பித்த புனர்வாழ்வுக் கழகம், தற்போது படிப்படியாக வளர்ச்சியடைந்து 99 முன்பள்ளிகளை நிறுவி சேவையாற்றி வருகின்றது. மிகுதி 46 முன்பள்ளிகளையும் தனியார் நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகள் பொறுப்பேற்று நடத்திவருகின்றன.

145 முன்பள்ளிகளில் 245 ஆசிரியர்கள் சேவையாற்றி வருகன்றனா். இதில் 99 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், ஏனையவற்றிற்கு கியூடெக் நிறுவனமும் பொதுஅமைப்புகளும் வேதனத்தை வழங்கி வருகின்றன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்தி வரும் முன்பள்ளிக்கு 1லட்சத்து 99ஆயிரம் ரூபா நிதி செலவாகிறது எனவும் 3வயதுக்கும 5வயதிற்கும் உட்பட்ட பிள்ளைகளை மட்டுமே உள்வாங்கியிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-35)

### தினசரி தியானம்

#### விவேகச் சிந்தனைகள்

உணவு உட்கொண்டபின் அனைவரும் கூடியிருந்து குறைந்தது அரை மணி நேரமாவது ஆன்மீக விடயங்கள் பற்றிப் பேச வேண்டும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு வீர வரலாறுகளையும் இதிகாச புராணக் கதைகளையும் சொல்ல வேண்டும்.

சுவாமி விவேகானந்தர்.

## வவு. மக்களின் மீள் குடியமர்வு பற்றி இராணுவத் தளபதியுடன் கலந்துரையாடல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருநது இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக வவுனியா இராணுவத் தளபதி மேஜர் ஜெ. சிசிர விஜயசூரியவுடன் சந்தித்து கலந்துரையாடியுள்ளதாக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கையின் போது இரணை இலுப்பைக் குளம, கோவில் புளியங்குளம், குஞ்சுக்குளம், செங்கப்படு, வேலங்குளம் ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்த அனுமதி வழங்குமாறு அல்லது அவர்களின் கிராமத்தை பார்வையிட அனுமதிக்குமாறு தன்னால் கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும், எனினும் மக்களை மீளக குடியமர்த்துவது தொடர்பாக பின்னர் ஆராயப்படும் என்றும், முதலில் மக்களை பார்வையிட அனுமதிப்பது தொடர்பாக தனக்கு எழுத்து மூலம் அறிவிக்குமாறு இராணுவத் தள பதி கோரியிருப்பதாக சிவநாதன் கிஷோர் தெரிவித்தார். (உ)

## யாழ். மாவட்டத்தில் ஆறு மகா சங்கங்கள்

(காரைநகர்)

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்களின் சமுர்த்தி வங்கிகளின் நிதிகளை முதலீடு செய்வதற்கும் சிறு குழுக்கள், சமுர்த்திச் சங்கங்கள் ஆகியவற்றுக்கிடையிலான சிறந்த இணைப்புக்களை மேற்கொள்வதற்குமாக 6 மகா சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு உடுவில் பிரதேச செயலகத்திலும் சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலும் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களுக்கு கரவெட்டி பிரதேச செயலகத்திலும் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு ஆகிய பிரதேச செயலகங்களுக்கு வேலணை பிரதேச செயலகத்திலும் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு யாழ்ப்பாண பிரதேச செயலகத்திலும் தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு தென்மராட்சி பிரதேச செயலகத்திலுமாக 6 மகா சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மகா சங்கங்களுக்கான முகாமைத்துவ பணிப்பாளரையும் ஏனைய உத்தியோகத்தர்களையும் சமுர்த்தி அதிகார சபையால் நியமிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-246)

## வேட்பு மனுத்தாக்கல் உஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

வடமததிய, சப்பிரகமுவ, மேல்மாகாண மற்றும் தென் மாகாண சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் இம்மாதம் 21ந் திகதி முதல் 28ந் திகதி வரை இடம்பெறவுள்ளது.

வேட்புமனுத் தாக்கல் செய்யும் அறிவித்தலை விசேட வர்த்தமானி மூலம் தேர்தல் ஆணையாளர் நேற்று வெளியிட்டார்.

சப்பிரகமுவ மாகாணத்துக்குட்பட்ட இரத்தினபுரி மாவட்டத்தில் 24 உறுப்பினர்களும் கேகாலை மாவட்டத்தில் 18 உறுப்பினர்களும் மேல் மாகாண சபைக்காக கொழும்பு மாவட்டத்தில் 43 உறுப்பினர்களும் கம்பஹா மாவட்டத்தில் 39 உறுப்பினர்களும் களுத்துறை மாவட்டத்தில் 20 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படுவர்.

அதேவேளை, வடமத்திய மாகாண சபைக்காக அநுராதபுர மாவட்டத்தில் 21 உறுப்பினர்களும் பொலனறுவை மாவட்டத்தில் 10 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்படுவர்.

தென்மாகாண சபைக்காக காலி மாவட்டத்தில் 23 உறுப்பினர்களும் மாத்தறை மாவட்டத்தில் 18 உறுப்பினர்களும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 12 உறுப்பினர்களும் தெரிவு செயயப்படவுள்ளனர்.

வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் இறுதித் தினத்தைத் தொடர்ந்து வரும் ஐந்து அல்லது எட்டு வாரங்களுக்குள் தேர்தல் நடைபெறும் தினத்தை தேர்தல் திணைக்களம் வெளியிடும். (த-15)

# கார்-லொறி விபத்து இளம் தாய் ஸ்தலத்தில் பலி

(புத்தளம்)

கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கி வந்த காரொன்று லொறியொன்றுடன் மோதுண்டதில் காரில் பயணம் செய்த இரு பிள்ளைகளின் தாய் ஸ்தலத்தில் பலியானார். இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மதுரங்குளி செம்பட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது எஸ். குமுதினி (வயது 45) என்ற இரு பிள்ளைகளின் தாயே மரணமானதாக முந்தல் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து புத்தளம் நோக்கி வந்து கொண்டிருந்த கார்-லொறி ஒன்றை முந்திச்செல்ல எத்தனித்த போது இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

லொறியின் சாரதி முந்தல் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டிருப்பதுடன் மேலதிக விசாரணைகளை முந்தல் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அஜித் பிரசன்ன தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-15)

## பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

இலங்கை தகவல் தொழில்நுட்பக் கணனி முகவர்களால் 'தமிழ்க கணனி விசைப்பலகையை பயன்படுத்துவது' குறித்த பயிற்சிப் பட்டறை ஒன்று இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00மணி முதல் ந.ப.10.30 மணிவரை யாழ். இந்துக கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

மேற்படி பயிற்சிப் பட்டறையில் சிங்கள மொழிமூலமான கணனிப் பயிற்சியும் விஸ்தரிப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(உ-18)

## பொதுக் கூட்டமும் பிரியாவிடை வைபவமும்

(யாழ்ப்பாணம்)

யாழ்நல்லூர் வெண்மை வாணிபர் சங்கத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டமும், சங்கத்தின் தலைவராகவிருந்து யாழ்.மாவட்ட வெண்மை வாணிபர் சங்க ஒன்றியத்திற்கு தலைவராக இடமாற்றம் பெற்றுச் செல்லும் கி.பாலராஜ்சிற்கான பிரியாவிடை நிகழ்வும் இன்று காலை 10 மணிக்கு ஆத்திசூடி கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.(ச)

## நூல் வெளியீட்டு விழா

(தம்பசிட்டி)

தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலய ஆசிரியர் மு.கண்ணகுமாரின் 11ம் ஆண்டு மாணவர்களுக்கான 'சமூகக்கல்வியும் வரலாறும்' நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 3மணிக்கு தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் கணபதிப பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.(ச-45)

## குளிரூட்டி அன்பளிப்பு

(துன்னாலை)

மந்திகை மருத்துவமனைக்கு அமெரிக்க இராணுவ மருத்துவக் குழுவினர் குளிரூட்டி ஒன்றை அன்பளிப்புச்செய்துள்ளனர்.

நேற்று மருத்துவ மனையின் பணிப்பாளர் டாக்டர் கதிரவேற்பிள்ளையிடம் குளிரூட்டி கையளிக்கப்பட்டது.

சத்திரசிகிச்சைக்குத் தேவையான மருந்துவகைகளும் அமெரிக்க மருத்துவக் குழுவினால் அன்பளிப்புச் செய்யபபட்டுள்ளது. (ச-150)

## விமான போக்குவரத்து சீரானது

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த விமான சிப்பந்திகளால் நடாத்தப்பட்டு வந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றுடன் முடிவுக்கு வந்துள்ளது.

இதனையடுத்து விமானப் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியதாகக் கூறப்படுகிறது.

சம்பள முரண்பாடு உட்படப் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து விமானச் சிப்பந்திகள் நேற்று முன் தினம் முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை தெரிந்ததே. (உ-61,10)

## கடற்புலிகளிடம் முறையீடு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு மணற்காட்டுப பகுதியில் உள்ள வீடொன்றின் செத்தையைப் பிரித்து உள் நுழைந்த படைச் சிப்பாய் வீட்டவரின் கூக்குரல் கேட்டு அயலவர் ஓடிவரவே தப்பியோடி விட்டதாக கடற்புலிகளின் வடமராட்சி அரசியற்துறை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏ.அருந்தவம் என்ற சம்பந்தப்பட்ட பெண்மணி நேற்றுச் செய்துள்ள அந்த முறைப்பாட்டில், கணவன் கடற்தொழிலுக்குச் சென்றிருந்த காரணத்தினால் தான் வீட்டில் தனித்திருந்த வேளை நேற்று முன்தினம் இரவு துப்பாக்கி சகிதம் செத்தையைப் பிரித்து சிப்பாய் வீட்டினுள் நுழைந்ததாகவும் தெரிவித்துள்ளார். (உ-43)

## தேர்தல்...

இவ்விடயங்கள் தொடர்பாக அஸ்கிரிய பீடாதிபதி உடுகம ஸ்ரீ புத்திரகித்த தேரர் தேர்தல் முறைமையில் மாற்றம் கொண்டு வருவதிலும் வாக்களிப்பின் போது தேசிய அடையாள அட்டையை கட்டாயப்படுத்தல் போன்ற விடயங்களில் அரசுகாட்டிவரும் அக்கறையையும் பாராட்டியுள்ளதுடன் சுயாதீனமாக வாக்களிக்கும் உரிமையை மக்களிக்கு அளிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார்.

(ம)

மீண்டும் உங்கள் வலம்புரியில்
விவாத அரங்கு
விடயம்
தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்
பலப்படுகின்றது
பலவீனப்படுகின்றது
உங்கள் கருத்துக்களை
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்

# உதவி வழங்கும் நாடுகளை தமிழ்க் கூட்டமைப்பு சந்திக்கும்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளையும் அமைப்புக்களையும் சந்திப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஏற்பாடுகளைச் செய்யவுள்ளது.

அண்மையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் ஐரோப்பிய ஒன்றிய கொழும்புப் பிரதி நிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போது சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே இலங்கைக்கு உதவி வழங்கப்படவேண்டுமென தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான நிதியுதவிகள் நேரடியாகவன்றி தமிழீழ விடுதலைப் புலிகளின் தன்னாட்சி அதிகார சபையின் ஊடாக வழங்கப்பட வேண்டும் என அவர்கள் கேட்டுக் கொண்டதுடன்,உதவி வழங்கும் அனைத்து நாடுகளையும், அமைப்புக்களையும் ஒரே இடத்தில் சந்திப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் கூட்டமைப்பினர் கேட்டுக் கொண்டனர். இதற்கு இணக்கம் வெளியிட்ட ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் அனைவரையும் ஒரே இடத்தில் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாக உறுதியளித்தனர் (ந-121)

## அ.அட்டை கண்டெடுப்பு

தெல்லிப்பழை குரும்பசிட்டியை முகவரியாகக் கொண்ட பாலசுப்பிரமணியம் ஐங்கரன் என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## படையினரின்...

மீற்றர் தொலைவில் இராணுவத்தின் காவலரண்கள் உள்ளன. எனினும் கொலையாளிகள் கைது செய்யப்படவில்லை. மேற்படி கொலையாளிகள் இராணுவத்திடமிருந்து சகல ஒத்துழைப்பையும் பெற்றிருக்கிறார்கள் என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறான "மறைமுக சகதிகளின்" உதவியுடனான கொலைகள் தொடருமாயின் வெறுமனே அமைதியைக் கடைப் பிடித்தவாறு இருக்கும் பொறுமையை இழக்கச் செய்துவிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

# மலையக வன்முறையைக் கண்டித்து கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

நுவரேலியா மாவட்டத்தில் கந்தப்பொலவிலும் களுத்துறை மாவட்டத்தில் இங்கிரியப் பகுதியிலும் தமிழ் மக்களுக்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைச்சம்பவங்களைக் கண்டித்து நேற்றுப் பிற்பகல் கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அண்மையில் கந்தப்பொல இங்கிரியப்பகுதிகளில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைக் கணடித்து மேல்மாகாண மக்கள் முன்னணியினால் இவ்வார்ப்பாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக இடம் பெற்ற இவ்வார்ப்பாட்டம் சுமார் இரண்டு மணிநேரம் வரை இடம் பெற்றது.

பலநூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இவ்வார்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், தமிழரசுக்கட்சியின் பாராளுமனற உறுப்பினர் மகாஈழவேந்தன், கலாநிதி ந.குமரகுருபரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம-121)

## யாழ்ப்பாண....

நண்பனின் வீட்டில் அன்ரனாவைக் கழற்றி அதனை மீளவும் பொருத்துவதற்காக உயர்த்திய வேளை அது சரிந்து வீதியோர மின்சாரக் கேபிள் மீது சாய்ந்தது.

இதனால் உயர் அழுத்த மின்சாரம் தாக்கி பிரஸ்தாப இளைஞர் பலியானார்.

இவரது சடலம் வவுனியா வைத்தியசாலையின் பிரேத அறையில் மரண விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து வவுனியாப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை இச் சம்பவத்தினால் வீட்டில் இருந்த இருவர் அதிர்ச்சிக்குள்ளாகி மயக்கமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-13)

## மாத இறுதியில்...

முற்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகத்தில் சந்தித்துப் பேசவுள்ளன.இச் சந்திப்பில் அமெரிக்கா, யப்பான், நோர்வே மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன கலந்து கொள்ளவுள்ளன.இதில் இலங்கைக்கான உதவித தொகை குறித்து பரிசீலிக்கப்படவுள்ளது.

இலங்கை வரும் தூதுவர் அகாஷி வன்னிக்கு சென்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-6)

## புலிகளுடன்...

சுதந்திர முன்னணி அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனும், சம்மந்தப்பட்ட ஏனைய சகல குழுக்கள் , சமூகங்கள் ஆகியவற்றுடனும் சரியான, நியாயமான அடிப்படையில் அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்துவதென ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியும் ஜே.வி.பியும் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன. பிரச்சினையில் சம்மந்தப்பட்ட சகலதரப்பினருடனும் ஆலோசனை நடத்தி இனப்பிரச்சினைக்கான விரிவான தீர்வொன்று காணப்படும் என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந-121)

THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1இல் இருந்து பட்டப்படிப்பு வரை 'Spoken English', 'Grammar' By.விக்னேஸ்வரன் ஆச்சாரி (Dip in English and Science) 426(302), K.K.S வீதி யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை.

# சமாதான முயற்சியை....

அரசியல கட்சி ஒன்றின் முக்கியஸ்தர்களின் ஆதரவுடன் ஜாதிக ஹெல உறுமய கடந்த தேர்தலில் போட்டியிட்டது என்ற உண்மை நடந்து முடிந்த பாராளுமன்ற சபாநாயகர் தெரிவின் மூலம் அம்பலமாகியுள்ளது.

கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசு, விடுதலைப் புலிகள் கேட்டது எல்லாவற்றையும் கொடுத்து நாட்டின் இறைமைக்கு ஆபத்தையேற்படுத்தியது என்ற குற்றச்சாட்டை முன்வைத்த ஜே.வி.பி தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கடசியுடன் கூட்டுச் சேர்ந்த பின்னர் ஜனாதிபதி சந்திரிகா அதே சலுகைகளை புலிகளுக்கு வழங்கும் போது வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதாக ஹெல உறுமய குற்றஞ் சாட்டியிருந்தது. ஜே.வி.பி மீதான ஹெல உறுமயவின் சீண்டல் அதன் உள்நோக்கத்தை வெளிப் படுத்துவதாக உள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் லண்டனில் இருந்து கொழும்புக்கு வந்து அங்கிருந்து வன்னிக்குச் செல்வதற்கு விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியை பாதுகாப்பு அமைச்சு வழங்கியமையை ஹெல உறுமய வெளிப்படையாகவே கண்டித்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஈடுபட்டுவரும் இவ்வேளையில் அரசின் சமாதான முயற்சிகளுக்கு சமாதானப் பேச்சு வார்த்தையை புலிகளுடன் ஆரம்பித்து வைத்தவர்கள் என்ற தோரணையில் ஜனாதிபதியின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர், ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்த போது கேட்டுக் கொண்டனர். இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்கா, ஜனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை விளக்க வேண்டுமென்று கேட்டுள்ளார்.

இந் நிலையில் அரசு முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு நேரடியாக தமது எதிர்ப்பை வெளிக்காட்டி விடுதலைப் புலிகளிடம் தமது சுயரூபத்தை காட்டிக் கொள்ள விரும்பாத ஐக்கிய தேசியக் கட்சியினர் மறை முகமாக ஹெல உறுமய மூலம் சமாதானப் பேச்சுவார்த்தையைக் குழப்பியடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாகவும் அரசியல் அவதானிகள் குற்றஞ் சாட்டி கவலை வெளியிட்டுள்ளனர். (ம)

# அதிக விக்கெட்டுக்களை....

ஹொட்னி வோல்ஷின் சாதனையை முரளி முறியடித்துள்ளார்.

132 டெஸ்ற் போட்டிகளில் பங்கேற்று 519 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய ஹொட்னி வோல்ஷின் சாதனையை முரளிதரன் 89 டெஸ்ற் போட்டிகளில் பங்கேற்று 521 டெஸ்ற் விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் முறியடித்தார்.

நேற்று சிம்பாப்வே அணியின் துடுப்பாட்ட வீரர் என்காலாவை ஆட்டமிழக்கச் செய்ததன் மூலம் உலக சாதனைக்குரிய 520ஆவது விக்கெட்டை முரளி பெற்றுக் கொண்டார்.

513 டெஸ்ற் விக்கெட்டுக்களுடன் சிம்பாப்வே அணியுடனான முதலாவது டெஸ்ற் போட்டியில் களமிறங்கிய முரளிதரன் சிம்பாப்பேயுடனான முதல் இனிங்கில் 6 விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் தனது டெஸ்ற் விக்கெட்டுக்களை 519 ஆக அதிகரித்து ஹொட்னி வோல்ஸின் உலக சாதனையை சமன் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-121)

# புலிகளுடன் இணைந்து....

மாஸ்டரை அண்மையில் வன்னி சென்று தான் சந்தித்ததாகவும் தெரிவித்துள்ள ஜெயலத் ஜெயவர்த்தன வடக்கு- கிழக்கு தமிழ் மக்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கான உதவிகளை வழங்குவதற்கும் தயாமாஸ்டருடனான சந்திப்பின் போது தான் உறுதியளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஏப்பிரல் மாதத் தேர்தலின் பின் விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதிக்குச் சென்ற முதல் தெற்கு அரசியல் வாதி தான் எனத் தெரிவித்துள்ள ஜெயலத் ஜெயவர்த்தன, முன்னாள பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அனுமதியுடனேயே தான் வன்னி சென்றிருந்ததாகவும் கூறியுள்ளார். அத்துடன் வடக்கு, கிழக்கிற்கான விஜயத்தினைத் தொடர்ந்தும் தான் மேற்கொள்ளப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் (உ)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.